வணக்கம் நண்பர்களே...

இந்தப்பகுதி முற்றிலும் பதினோறாவது தமிழ் சமச்சீர் புத்தகம் செய்யுள் பகுதியில் இருந்து எடுக்கப்பட்ட கேள்விகள் அடங்கிய தொகுப்பாகும். விடைகளும் ஒவ்வொரு பகுதியின் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. ஒரு சில வினாக்கள் புத்தகத்தை தாண்டி வெளியில் இருந்து எடுக்கப்பட்டவை.

பதினோறாவது தமிழ் புத்தகத்தில் இடம்பெற்றுள்ள செய்யுள் பகுதிகள்:

1) வாழ்த்து

(அ) இறை வாழ்த்து

(ஆ) மொழி வாழ்த்து

(இ) நாட்டு வாழ்த்து

2) தொகை நூல்கள்

(அ) புறநானூறு; (ஆ) அகநானூறு

(இ) ஐங்குறுநூறு

3) அற இலக்கியம் - திருக்குறள்

4) தொடர்நிலை செய்யுள்கள்

(அ) சீவகசிந்தாமணி

(ஆ) சீறாப்புராணம்

(இ) மனோன்மணியம்

(ஈ) குயில்பாட்டு

5) சிற்றிலக்கியங்கள்

(அ) அழகர் கிள்ளைவிடு தூது

(ஆ) கலிங்கத்துப்பரணி

(இ) முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்

(ஈ) பெத்தலகேம் குறவஞ்சி

6) மறுமலர்ச்சி பாடல்கள்

(அ) எந்நாளோ; (ஆ) பூக்கட்டும் புதுமை

(இ) விடுதலை விளைத்த உரிமை; (ஈ) தளை

(உ) கண்; (ஊ) தண்ணீர் வங்கிகள்

7) வழிபாட்டு நூல்கள்

(அ) தேவாரம்; (ஆ) திருப்பாவை

(இ) இயேசு பிரான்; (ஈ) புத்தர்

அனைவரும் அனைத்து வினாக்களுக்கும் பதில் அளித்து பழகி வெற்றிப்பெற என் வாழ்த்துக்கள்

இப்படிக்கு

மீண்டும் உங்கள் ஆதரவுடன்

கோ.பழனி முருகன்

## பதினொன்றாம் வகுப்பு தமிழ் - செய்யுள்

### 1) வாழ்த்துப் பகுதி

### (அ) இறை வாழ்த்து

1) அருள்பழுத்த பழச்சுவையே கரும்பே தேனே - எனத் தொடங்கும் பாடலை பாடிய புலவர் யார்?

A] வள்ளலார்

B] பாரதியார்

C] மாணிக்கவாசகர்

D] தாயுமானவர்

2) தாயுமானவரின் கீழ்க்கண்ட எந்த நூலானது 1452 பாடல்களைக் கொண்டதாகும்?

A] தாயுமானவர் திருப்பாடல் திரட்டு

B] பராபரக்கன்னி

C] கிளிக்கண்ணி

D] எந்நாட்கன்னி

3) தமிழ் மொழியின் உபநிடதம் - என அழைக்கப்படும் தாயுமானவரின் நூல் எது?

A] கிளிக்கண்ணி

B] எந்நாட்கண்ணி

C] தாயுமானவர் திருப்பாடல் திரட்டு

D] பராபரக்கண்ணி

4) தாயுமானவர் பிறந்த ஊர் யாது?

A] வேளாங்கண்ணி

B] வேதாரண்யம்

C] திருவல்லிக்கேணி

D] திருச்சிராப்பள்ளி

5) கீழ்க்கண்ட எந்த ஊரில் கோவில் கொண்டுள்ள இறைவன் அருளால் பிறந்தமையால் இவர் தாயுமானவர் என பெற்றோர்களால் அழைக்கப்பட்டார்?

A] திருப்பாதிரிப்புலியூர்

B] திருக்கோவிலூர்

C] திண்டுக்கல்

D] திருச்சிராப்பள்ளி

6) தாயுமானவர் அவர்கள் திருச்சி ஆண்ட நாயக்கரிடம் மற்றும் அவர் மனைவி இராணி மீனாட்சி ஆட்சியிலும் கீழ்க்கண்ட எந்த பணியை மேற்கொண்டு இருந்தார்?

A] அமைச்சர்

B] அரசு கருவூல காவலர்

C] அரசு கருவூல அலுவலர்

D] அரசு அலுவலர்

7) தாயுமானவர் அவர்கள் கீழ்க்கண்ட எந்த மங்கையை மணந்தார்?

A] மட்டுவார்குழலி

B] மடுவார்குழலி

C] மாட்டுவர்குழலி

D] மட்டுவார்குழளி

8) தாயுமானவர் அவர்கள் துறவறம் பூண்ட ஆண்டு எது?

A] 1735 - 30 வது அகவை

B] 1739 - 34 வது அகவை

C] 1736 - 31 வது அகவை

D] 1734 - 29 வது அகவை

9) தாயுமானவர் அவர்கள் கீழ்க்கண்ட யாரிடம் உபதேசம் பெற்று துறவறம் பூண்டார்?

A] திருமூலர் மரபில் வந்த மௌனகுரு

B] சம்பந்தர் மரபில் வந்த மௌனகுரு

C] இறைவன் அருள் பெற்ற மௌனகுரு

D] தாயுமானவர் மரபை சேர்ந்த மௌகுரு

10) தாயுமானவர் நினைவு இல்லம் - கீழ்க்கண்ட எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது?

A] நாகப்பட்டினம்

B] நாமக்கல்

C] சென்னை

D] இராமநாதபுரம்

11) தாயுமானவர் வாழ்ந்த காலம் யாது?

A] 16 ஆம் நூற்றாண்டு

B] 17 ஆம் நூற்றாண்டு

C] 18 ஆம் நூற்றாண்டு

D] 15 ஆம் நூற்றாண்டு

12) தாயுமானவர் திருப்பாடல் திரட்டு - நூலின் நூல் அமைப்பு யாது?

A] 36 தலைப்புக்கள் + 56 பிரிவுகள் + 1452 பாடல்கள்

B] 36 தலைப்புக்கள் + 52 பிரிவுகள் + 1452 பாடல்கள்

C] 34 தலைப்புக்கள் + 52 பிரிவுகள் + 1452 பாடல்கள்

D] 34 தலைப்புக்கள் + 56 பிரிவுகள் + 1452 பாடல்கள்

13) தாயுமானவர் திரட்டு நூலில் இடம்பெற்றுள்ள பாடல்களில் எத்தனை பாடல் கண்ணிகளாகவும், வெண்பாக்களாகவும் உள்ளன?

A] 770 கண்ணிகள் + 84 வெண்பாக்கள்

B] 773 கண்ணிகள் + 81 வெண்பாக்கள்

C] 771 கண்ணிகள் + 83 வெண்பாக்கள்

D] 771 கண்ணிகள் + 82 வெண்பாக்கள்

14) பழச்சுவை, உயிர்த்திரள் - ஆகியவற்றின் இலக்கண குறிப்பு வரைக?

A] வினைத்தொகை

B] ஆறாம் வேற்றுமைத்தொகை

C] இரண்டாம் வேற்றுமைத்தொகை

D] உரிச்சொற்றொடர்

15) விழுப்பொருள் - என்பதன் இலக்கண குறிப்பு யாது?

A] வினைத்தொகை

B] ஆறாம் வேற்றுமைத்தொகை

C] இரண்டாம் வேற்றுமைத்தொகை

D] உரிச்சொற்றொடர்

16) வள்ளலாரும், பாரதியாரும் எளிய கவிதைகள் பாட முன்னோடியாகத் திகழ்ந்தவர் யார்?

A] கடுவெளிச் சித்தர்

B] தாயுமானவர்

C] மௌனகுரு

D] கேடிலியப்பர்

17) 'உபநிடதக் கருத்துக்களையும், மற்ற ஞான நூல்களின் உட்பொருள்களையும் மிகத் தெளிவாக தமிழில் பாடியவர்' - என்று தாயுமானவரை பாராட்டியவர் யார்?

A] பாரதிதாசன்

B] வள்ளலார்

C] மு.வரதராசனார்

D] பாரதியார்

## விடைகள் - இறை வாழ்த்து

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | D | 5 | D | 9 | A | 13 | C | 17 | C |
| 2 | A | 6 | C | 10 | D | 14 | B | | |
| 3 | C | 7 | A | 11 | C | 15 | D | | |
| 4 | B | 8 | C | 12 | A | 16 | B | | |

## (ஆ) மொழி வாழ்த்து

1) வைய மீன்றதொன் மக்க ளுத்தினைக் - எனத் தொடங்கும் பாடலை பாடிய புலவர் யார்?

A] தாயுமானவர்

B] நீ.கந்தசாமிப் பிள்ளை

C] சுப்பிரமணிய பாரதியார்

D] சுப்புரத்தினதாசன்

2) நீ.கந்தசாமி பிள்ளை அவர்கள் பிறந்த ஊர் எது?

A] திருமறைக்காடு

B] தச்சநல்லூர்

C] பள்ளியகரம்

D] பள்ளியக்காரம்

3) நீ.கந்தசாமி பிள்ளை அவர்கள் கற்ற மொழிகளில் தவறானது எது?

A] ஆங்கிலம்

B] பிரெஞ்சு

C] இலத்தின்

D] உருது

4) நீ.கந்தசாமி பிள்ளை அவர்கள் கீழ்க்கண்ட எந்த தமிழ்ச் சங்கத்தில் பல ஆண்டுகள் அமைச்சராக விளங்கினார்?

A] கரந்தைத் தமிழ்ச் சங்கம்

B] மதுரைத் தமிழ்ச் சங்கம்

C] திருப்பெருந்துறை தமிழ்ச் சங்கம்

D] திருவாவடுதுறை தமிழ்ச் சங்கம்

5) கீழ்க்கண்ட யார் எழுதிய ஆங்கில கவிதை ஒன்றைத் தமிழ் செய்யுள் வடிவில் நீ.கந்தசாமிப் பிள்ளை மொழிப் பெயர்த்துள்ளார்?

A] கால்டுவெல்

B] தாமஸ்கிரே

C] தாமஸ்ரே

D] ஜி.யூ.போப்

6) ஆங்கில கவிதையை நீ.கந்தசாமிப் பிள்ளை அவர்கள் கீழ்க்கண்ட எந்த தலைப்பில் மொழி பெயர்த்துள்ளார்?

A] திருவருட்பா

B] இறைவருட்பா

C] இரங்கற்பா

D] அருட்பா

7) பள்ளியகரம் ஊரானது தற்போது எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A] பள்ளியக்கரம்

B] பள்ளியக்கிரம்

C] பள்ளியக்காரம்

D] பள்ளியக்கிரகாரம்

8) நீ.கந்தசாமிப் பிள்ளை அவர்கள் பிறந்த ஆண்டு எது?

A] 1898

B] 1899

C] 1897

D] 1896

9) தாள் - என்ற சொல்லின் பொருள் யாது?

A] மெல்ல

B] திருவடி

C] உலகம்

D] தாய்

10) உரைகாலம் - என்பதன் இலக்கண குறிப்பு யாது?

A] வினையெச்சம்

B] பண்புத்தொகை

C] உரிச்சொற்றொடர்

D] வினைத்தொகை

11) ஐயைதாள் - என்ற சொல்லின் இலக்கண குறிப்பு யாது?

A] வினைத்தொகை

B] இரண்டாம் வேற்றுமைத்தொகை

C] ஆறாம் வேற்றுமைத்தொகை

D] ஆகுபெயர்

12) தாள் தலை - என்ற சொல்லின் இலக்கண குறிப்பு யாது?

A] இரண்டாம் வேற்றுமைத் தொகை

B] ஆறாம் வேற்றுமைத் தொகை

C] வினைத்தொகை

D] இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத்தொகை

விடைகள் - மொழி வாழ்த்து

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | B | 4 | A | 7 | D | 10 | D |
| 2 | C | 5 | B | 8 | A | 11 | C |
| 3 | D | 6 | C | 9 | B | 12 | C |

## (இ) நாட்டு வாழ்த்து

1) திருநி றைந்தனை தன்னிக ரொன்றிலை - என்றப் பாடலை பாடியவர் யார்?

A] பாரதியார்

B] பாரதிதாசன்

C] இராசகோபாலன்

D] முடியரசன்

2) திருநி றைந்தனை தன்னிக ரொன்றிலை - எனத் தொடங்கும் பாரதியார் எழுதிய பாடலானது கீழ்க்கண்ட எந்தப் பகுப்பில் இப்பாடல் இடம்பெற்றுள்ளது?

A] பகவத் கீதை

B] தேசிய கீதங்கள்

C] வந்தே மாதரம்

D] பாஞ்சாலி சபதம்

3) திருநி றைந்தனை தன்னிக ரொன்றிலை - எனத் தொடங்கும் பாடலானது பக்கிம் சந்திர சட்டோபாத்தியாரின் கீழ்க்கண்ட எப்பாடலின் மொழி பெயர்ப்பாகும்?

A] பகவத்கீதை

B] தேசியகீதங்கள்

C] வந்தேமாதரம்

D] தேசியப்பாடல்

4) பங்கிம் சந்திர சட்டோபாத்தியார் அவர்கள் வந்தே மாதரம் என்னும் பாடலை எந்த மொழியில் எழுதினார்?

A] ஆங்கிலமொழி

B] வங்கமொழி

C] தமிழ்மொழி

D] வடமொழி

5) தேசியக்கவி - என்று போற்றப்படுபவர் யார்?

A] பாரதிதாசன்

B] இரவிந்தீரநாத் தாகூர்

C] பங்கிம் சந்திர சட்டோபாத்தியார்

D] பாரதியார்

6) பாரதியார் அவர்கள் கீழ்க்கண்ட எந்த இடத்தில் எத்தனை மாதங்கள் ஆசிரியர் பணியை செய்தார்?

A] மதுரை சேபதி நடுநிலைப்பள்ளி - 3 மாதங்கள்

B] மதுரை சேதுபதி உயர்நிலைப்பள்ளி - 3 மாதங்கள்

C] தஞ்சை சேதுபதி நடுநிலைப்பள்ளி - 3 மாதங்கள்

D] தஞ்சை சேதுபதி உயர்நிலைப்பள்ளி - 3 மாதங்கள்

7) பாரதியார் பணியாற்றிய வார இதழ்களில் தவறானது எது?

A] கர்மயோகி

B] பாலபாரதா

C] இந்தியா

D] சூர்யோதயம்

8) பாரதியாரின் மொழிப் பெயர்ப்பு நூல் எது?

A] ஞானரதம்

B] பகவத் கீதை

C] பாஞ்சாலி சபதம்

D] தமிழியக்கம்

9) பாரதியார் அவர்கள் கீழ்க்கண்ட எந்த இதழில் உதவி ஆசிரியராக பணியாற்றினார்?

A] சக்ரவர்த்தினி

B] இந்தியா

C] சுதேசிமித்ரன்

D] சூர்யோதயம்

10) ஆங்கிலேயரால் வெளிவராமல் தடைவிதிக்கப்பட்ட இந்தியா வார இதழானது கீழ்க்கண்ட எந்த இடத்தில் இருந்து பாரதியார் வெளியிட்டார்?

A] தூத்துக்குடி

B] சென்னை

C] கடலூர்

D] புதுச்சேரி

11) மல்குதல் - என்பதன் பொருள் யாது?

A] தழுவுதல்

B] நிறைதல்

C] புன்னகைத்தல்

D] குறைதல்

12) மருவு - என்பதன் பொருள் யாது?

A] பொருந்திய

B] நிறைதல்

C] திருவடிகள்

D] வயல்

விடைகள் - நாட்டு வாழ்த்து

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | A | 2 | B | 3 | C | 4 | B | 5 | D |
| 6 | B | 7 | A | 8 | B | 9 | C | 10 | D |
| 11 | B | 12 | A | | | | | | |

## 2) தொகை நூல்கள்

### (அ) புறநானூறு

1) கீழ்க்கண்ட எந்த இருநூல்கள் எட்டுத்தொகை நூல்களுள் புறப்பொருள் இலக்கியங்கள் வகையைச் சார்ந்தது?

A] நற்றிணை, குறுந்தொகை

B] பதிப்பற்று, பரிபாடல்

C] புறநானூறு, பதிற்றுப்பத்து

D] கலித்தொகை, ஐங்குறுநூறு

2) இப்பொழுது நம்மிடை உள்ள எந்த எட்டுத்தொகை நூல்களில் புறப்பாடல்களானது மிகுதியாக உள்ளன?

A] புறநானூறு

B] பரிபாடல்

C] பதிற்றுப்பத்து

D] கலித்தொகை

3) எட்டுத்தொகை நூல்களில் அகமும் புறமும் கலந்த பாடல் தொகுதி எனப்படும் நூல் எது?

A] பரிபாடல்

B] கலித்தொகை

C] புறநானூறு

D] ஐங்குறுநூறு

4) பழம்பெரும் இலக்கண நூலாகிய தொல்காப்பியம் கூறும் அகப்பொருள், புறப்பொருள் இலக்கணங்களுக்கு இலக்கியங்களாய் திகழும் நூல்கள் எது?

A] சங்க இலக்கியங்கள்

B] பத்துப்பாட்டு நூல்கள்

C] காப்பிய நூல்கள்

D] எட்டுத்தொகை நூல்கள்

5) கீழ்க்கண்ட எந்த நூலானது வெட்சி, முதல் பெருந்திணை வரையுள்ள புறத்திணைக்களுக்குரிய துறைப்பொருள்களை கொண்டு அமைந்த நூல்களாகும்?

A] புறநானூறு

B] அகநானூறு

C] கலித்தொகை

D] ஐங்குறுநூறு

6) முடியுடைய மூவேந்தர்கள், சிற்றரசர்கள், அமைச்சர்கள், சேனைத் தலைவர்கள், வீரர்கள், கடையெழு வள்ளல்கள், கடைச்சங்கப்

புலவர்கள் எனப் பலருடைய வரலாற்று குறிப்புகளும் அக்காலத்துள்ளாருடைய நடை முதலியனவும் கீழ்க்கண்ட எந்த நூலில் காணலாம்?

A] அகநானூறு

B] பரிபாடல்

C] புறநானூறு

D] நற்றிணை

7) புறநானூற்று நூலின் சில பாடல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் யார்?

A] வீரமாமுனிவர்

B] கால்டுவெல்

C] எல்லீஸ் துரை

D] ஜி.யூ.போப்

8) அறுகுளத் துகுத்து மகல்வயற் பொழிந்தும் - என்ற வரிப்பாடல்கள் இடம்பெற்றுள்ள நூல் எது?

A] அகநானூறு

B] ஐங்குறுநூறு

C] புறநானூறு

D] கலித்தொகை

9) வரலாற்றுக் குறிப்புகளைப் பாடல்களுள் பொதிந்து வைத்துப் பாடுவதில் வல்லவர் யார்?

A] கபிலர்

B] கம்பர்

C] வால்மீகி

D] இளங்கோவடிகள்

10) கபிலர் அவர்கள் பதிற்றுப்பத்து நூலில் கீழ்க்கண்ட எந்த பத்தை பாடியுள்ளார்?

A] இரண்டாம் பத்து

B] நான்காம் பத்து

C] ஐந்தாம் பத்து

D] ஏழாம் பத்து

11) கபிலர் அவர்கள் பதிற்றுப்பத்து நூலைப் பாடி கீழ்க்கண்ட யாரிடம் உம்பற்காட்டு வாரியையும், அவன் மகன் குட்டுவனையும் சேரலையும் பரிசிலாகப் பெற்றார்?

A] இமயவரமன் நெடுஞ்சேரலாதன்

B] கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன்

C] செல்வக்கடுங்கோ வாழியாதான்

D] பல்யானை செல்குழுட்டுவன்

12) அறுகுளத் துகுத்து மகல்வயற் பொழிந்தும் - என்ற தொடங்கும் பாடல் மூலம் கடையேழு வள்ளல்களில் கீழ்க்கண்ட யாரை கபிலர் புகழ்ந்து பாடியுள்ளார்?

A] பாரி

B] ஓரி

C] அதியமான்

D] பேகன்

13) பேகன் பிறந்த ஊர் எது?

A] தர்மபுரி

B] நல்லூர்

C] கடையநல்லூர்

D] கடலூர்

14) ஓர் வேந்தனெதிர் சென்று அவன் தன்மையைக் கூறிப் புகழ்வது____துறை எனப்படும்?

A] இயன்மொழித் துறை

B] பரிசில் துறை

C] உடனிலைத் துறை

D] புறநானூற்றுத் துறை

15) அறுகுளம் - என்பதன் பொருள் யாது?

A] நீர் வற்றாத குளம்

B] நீர் வற்றிய குளம்

C] கானல் நீர் குளம்

D] தூர் செய்யப்பட்ட குளம்

16) வீரர் அல்லாதார் மேலும், முதுகிட்டார் மேலும், புண்பட்டார் மேலும், மூத்தார் இளையார் மேலும் செல்லுவது________எனப்படும்?

A] படைமடம்

B] கொடைமடம்

C] இறைமடம்

D] புகழ்மடம்

17) அறுகுளம், அகல்வயல் - ஆகிய சொற்களின் பொருள் யாது?

A] பண்புத்தொகைகள்

B] வினையெச்சங்கள்

C] வினைத்தொகைகள்

D] வியங்கோள் வினைமுற்றுகள்

18) கழற்கால் - என்ற சொல்லின் இலக்கணக் குறிப்பு யாது?

A] மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

B] ஏழாம் வேற்றுமைத் தொகை

C] இரண்டாம் வேற்றுமைத் தொகை

D] இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

19) கடாஅ - என்பதன் இலக்கண குறிப்பு யாது?

A] சொல்லிசை அளபெடை

B] இயற்கை அளபெடை

C] செய்யுளிசை அளபெடை

D] இன்னிசை அளபெடை

விடைகள் - புறநானூறு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | C | 2 | B | 3 | A | 4 | D | 5 | A |
| 6 | C | 7 | D | 8 | C | 9 | A | 10 | C |
| 11 | B | 12 | D | 13 | B | 14 | A | 15 | B |
| 16 | A | 17 | C | 18 | D | 19 | B | | |

## (ஆ) அகநானூறு

1) அகநானூறு நூலானது எத்தனை பிரிவுகளைக் கொண்டது?

A] 02

B] 03

C] 04

D] 05

2) அகநானூறு நூலில் உள்ள களிற்றுயானை பிரிவில் மொத்தப்பாடல்களின் எண்ணிக்கை யாது?

A] 120 பாடல்கள்

B] 100 பாடல்கள்

C] 180 பாடல்கள்

D] 150 பாடல்கள்

3) மணிமிடைப்பவளப் பிரிவில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை யாது?

A] 120 பாடல்கள்

B] 100 பாடல்கள்

C] 180 பாடல்கள்

D] 150 பாடல்கள்

4) நித்திலக்கோவை பிரிவில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை யாது?

A] 120 பாடல்கள்

B] 100 பாடல்கள்

C] 180 பாடல்கள்

D] 150 பாடல்கள்

5) அகநானூற்று நூலில் உள்ள பாடல்களின் அடிவரையறை யாது?

A] 4 அடிமுதல் 8 அடிவரை

B] 3 அடிமுதல் 6 அடிவரை

C] 9 அடிமுதல் 12 அடிவரை

D] 13 அடிமுதல் 31 அடிவரை

6) நெடுந்தொகை - என அழைக்கப்படும் நூல் எது?

A] புறநானூறு

B] அகநானூறு

C] பரிபாடல்

D] நற்றிணை

7) அகநானூற்றில் 1, 3, 5 என ஒற்றைப்படை எண்களாக வரும் பாடல்கள் எந்த வகைத் திணைப் பாடல்களாகும்?

A] பாலைத் திணை

B] முல்லைத் திணை

C] மருதத் திணை

D] குறிஞ்சித் திணை

8) அகநானூற்றில் 2, 8 என்று வரும்பாடல்கள் கீழ்க்கண்டவற்றில் எந்த திணை வகையைச் சார்ந்தது?

A] பாலைத் திணை

B] முல்லைத் திணை

C] நெய்தல் திணை

D] குறிஞ்சித் திணை

9) அகநானூற்றில் 4, 14 என வரும் பாடல்கள் கீழ்க்கண்டவற்றில் எந்த திணைவகையைச் சார்ந்தது?

A] குறிஞ்சித் திணை

B] முல்லைத் திணை

C] மருதத் திணை

D] நெய்தல் திணை

10) அகநானூற்றில் 6, 16 என்று வரும்பாடல்கள் கீழ்க்கண்டவற்றில் எந்த திணைவகையைச் சார்ந்தது?

A] பாலைத் திணை

B] முல்லைத் திணை

C] மருதத் திணை

D] குறிஞ்சித் திணை

11) அகநானூற்றில் 10, 20 என வரும்பாடல்கள் கீழ்க்கண்டவற்றில் எவ்வகை திணையைச் சார்ந்தது?

A] நெய்தல் திணை

B] மருதத் திணை

C] பாலைத் திணை

D] முல்லைத் திணை

12) அகநானூற்று நூலை தொகுத்தவர் யார்?

A] பாண்டியன் உக்கிரப்பெருவழுதி

B] உப்பூரிகுடிகிழார் மகனார் உருத்திரசன்மார்

C] பாரதம் பாடிய பெருந்தேவனார்

D] கடல்பிறக் கொட்டிய செங்குட்டுவன்

13) அகநானூற்று நூலை தொகுப்பித்தவன் யார்?

A] பாண்டியன் உக்கிரப்பெருவழுதி

B] உப்பூரிகுடிகிழார் மகனார் உருத்திரசன்மார்

C] பாரதம் பாடிய பெருந்தேவனார்

D] கடல்பிறக் கொட்டிய செங்குட்டுவன்

14) ஓங்குமலைச் சிலம்பில் பிடவுடன் மலர்ந்த - எனத் தொடங்கும் பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் எது?

A] புறநானூறு

B] அகநானூறு

C] பரிபாடல்

D] நற்றிணை

15) ஓங்குமலைச் சிலம்பில் பிடவுடன் மலர்ந்த - எனத் தொடங்கும் அகநானூற்று பாடலை பாடியவர் யார்?

A] கபிலர்

B] கம்பர்

C] ஔவையார்

D] பரணர்

16) நீண்டநாள் வாழச் செய்யும் அமிழ்தத்தை ஒத்ததோர் அரிய நெல்லிக்கனியைத் தான் உண்ணாது அதியமான் ஔவைக்கு ஈந்து மகிழ்ந்த செய்தியானது கீழ்க்கண்ட எந்த நூலில் காணலாம்?

A] நற்றிணை

B] புறநானூறு

C] அகநானூறு

D] பதிற்றுப்பத்து

17) ஔவையார் பாடிய பாடல்களானது கீழ்க்கண்ட எந்த நூலில் மட்டும் இடம்பெறவில்லை?

A] புறநானூறு

B] குறுந்தொகை

C] பரிபாடல்

D] நற்றிணை

18) கரிகாலனின் மகளைப் போன்று தன் கணவனைத் தேடி அலைந்தது போல இவளும் கீழ்க்கண்ட எந்த பெண்மணி தன் கணவனை தேடி அலைந்தால் சங்கப்பாடல்கள் கூறுகின்றன?

A] ஆதிமந்தி

B] ஔவையார்

C] வெண்ணிக்குயத்தியார்

D] வெள்ளிவீதியார்

19) கரிகாலனின் மகள் பெயர் யாது?

A] ஆதிமந்தி

B] வெள்ளிவீதியார்

C] புனிதவதியார்

D] ஆதிமத்தி

20) 'காலே பரிதப்பினவே கண்ணே, நோக்கி நோக்கி வாளிழந்தவனே' - என்ற பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?

A] புறநானூறு

B] குறுந்தொகை

C] பரிபாடல்

D] நற்றிணை

21) ஔவையார் அவர்கள் அகநானூறு, குறுந்தொகை, திருவள்ளுவமாலை, நற்றிணை ஆகிய நூல்களில் பாடியுள்ள பாடல்களை மேற்குறிப்பிட்ட நூல்களின் வரிசைப்படி கூறுக?

A] 2, 1, 8, 2

B] 1, 2, 2, 8

C] 2, 8, 1, 2

D] 8, 1, 2, 2

22) சாஅய் - என்பதன் இலக்கண குறிப்பு வரைக

A] சொல்லிசை அளபெடை

B] இயற்கை அளபெடை

C] செய்யுளிசை அளபெடை

D] இன்னிசை அளபெடை

23) பிரிந்தோர் - என்பதன் இலக்கண குறிப்பு வரைக?

A] வினைத்தொகை

B] வியங்கோள் வினைமுற்று

C] பண்புத்தொகை

D] வினையாலணையும் பெயர்

24) சிலம்பு - என்பதன் பொருள் யாது?

A] மலைச்சாரல்

B] மழைச்சாரல்

C] காலில் அணியும் அணிகலன்

D] காப்பியம்

25) சாஅய் - என்பதன் பொருள் யாது?

A] சாரல் அடித்து

B] தடிமனற்று

C] சாயும் நேரம்

D] மெலிவுற்று

26) உழுவை - என்பதன் பொருள் யாது?

A] பெண் புலி

B] ஆண் புலி

C] பெண் புலிக்குட்டி

D] ஆண் புலிக்குட்டி

27) பிணவு - என்பதன் பொருள் யாது?

A] ஆண் புலி

B] ஆண் புலிக்குட்டி

C] பெண் புலி

D] பெண் புலிக்குட்டி

28) 'காலே பரிதப்பினவே கண்ணே, நோக்கி நோக்கி வாளிழந்தவனே' - என்ற பாடலை பாடிய புலவர் யார்?

A] கபிலர்

B] ஒட்டக்கூத்தர்

C] கம்பர்

D] ஔவையார்

விடைகள் - அகநானூறு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | B | 7 | A | 13 | A | 19 | A | 25 | D |
| 2 | A | 8 | D | 14 | B | 20 | B | 26 | B |
| 3 | C | 9 | B | 15 | C | 21 | C | 27 | C |
| 4 | B | 10 | C | 16 | B | 22 | B | 28 | D |
| 5 | D | 11 | A | 17 | C | 23 | D | | |
| 6 | B | 12 | B | 18 | D | 24 | A | | |

## (இ) ஐங்குறுநூறு

1) ஐங்குறு நூற்றில் உள்ள பாடல்களின் அடிவரையறை யாது?

A] 4 அடிமுதல் 8 அடிவரை

B] 3 அடிமுதல் 6 அடிவரை

C] 9 அடிமுதல் 12 அடிவரை

D] 13 அடிமுதல் 31 அடிவரை

2) ஐங்குறு நூற்றில் உள்ள பாடல்களானது கீழ்க்கண்ட எந்த திணை வரிசை முறையில் அமைக்கப்பட்டுள்ளது?

A] குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை

B] முல்லை, நெய்தல், பாலை, மருதம், குறிஞ்சி

C] மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை

D] பாலை, மருதம், நெய்தல், முல்லை, குறிஞ்சி

3) பொருத்துக

1) மருதத்திணை - அம்மூவனார்;

2) நெய்தல்திணை - கபிலர்;

3) குறிஞ்சித்திணை - ஓதலாந்தையார்;

4) பாலைத்திணை - பேயனார்;

5) முல்லைத்திணை - ஓரம்போகியார்;

A] 1, 2, 3, 4, 5

B] 5, 1, 2, 4, 3

C] 3, 4, 5, 1, 2

D] 5, 1, 2, 3, 4

4) ஐங்குறுநூறு நூலை தொகுத்தவர் யார்?

A] பாண்டியன் உக்கிரப்பெருவழுதி

B] உப்பூரிகுடிகிழார் மகனார் உருத்திரசன்மார்

C] புலத்துறை முற்றிய கூடலூர் கிழார்

D] கோச்சேரமான் யானைக்கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை

5) ஐங்குறுநூறு நூலை தொகுப்பித்தவர் யார்?

A] பாண்டியன் உக்கிரப்பெருவழுதி

B] கோச்சேரமான் யானைக்கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை

C] பாரதம் பாடிய பெருந்தேவனார்

D] உப்பூரிகுடிகிழார் மகனார் உருத்திரசன்மார்

6) எரிமருள் வேங்கை யிருந்த தோகை - எனத் தொடங்கும் ஐங்குறுநூறு நூலை இயற்றியவர் யார்?

A] கபிலர்

B] கம்பர்

C] பரணர்

D] சமண முனிவர்

7) 'புலனழுக் கற்ற அந்தணாளன்' - என்று புகழப்பட்டவர் யார்?

A] கம்பர்

B] பரணர்

C] கபிலர்

D] நக்கீரர்

8) கபிலர் அவர்கள் கீழ்க்கண்ட யாரிடம் அவைக்களப் புலவராக விளங்கினார்?

A] ஓரி

B] பேகன்

C] நல்லிக்கோடன்

D] பாரி

9) கபிலர் பாடிய நூல்களின் சிறப்புகளில் கீழ்க்கண்டவற்றில் தவறானது எது?

A] ஐங்குறு நூற்றில் குறிஞ்சித்திணைப்பாடல்கள்

B] பதிற்றுப்பத்தில் ஏழாம் பத்து

C] கலித்தொகையில் குறிஞ்சிக்கலியில் 33 பாடல்கள்

D] கலித்தொகையில் குறிஞ்சிக்கலியில் 29 பாடல்கள்

10) இனிதுசெய் தனையா நுந்தை வாழியர் - என்ற வரியில் நுந்தை வாழியர் என்ற பொருளானது கீழ்க்கண்ட யாரை வாழ்த்தியது?

A] தலைவனை

B] தலைவன் பெற்றோரை

C] தலைவியை

D] தலைவியின் பெற்றோரை

11) பயந்தோர்ப்பழிச்சல் - என்பதன் பொருள் யாது?

A] தலைவனின் பெற்றோரை வாழ்த்துவது

B] தலைவியின் பெற்றோரை வாழ்த்துவது

C] தோழியின் பெற்றோரை வாழ்த்துவது

D] தலைவன், தலைவியை வாழ்த்துவது

12) இழையணி - என்பதன் இலக்கண குறிப்பு யாது?

A] பண்புத்தொகை

B] உரிச்சொற்றொடர்

C] வினைத்தொகை

D] வினையெச்சம்

13) வாழியர் - என்பதன் இலக்கண குறிப்பு யாது?

A] வினைத்தொகை

B] வினையெச்சம்

C] வினையாலணையும் பெயர்

D] வியங்கோள் வினைமுற்று

14) பொருத்துக

1) உகிர் - பெண்;

2) குருளை - பன்றி;

3) பிணவு - நகம்;

4) கேழல் - குட்டி;

A] 3, 4, 1, 2

B] 1, 2, 3, 4

C] 3, 4, 2, 1

D] 2, 1, 4, 3

15) கபிலரை 'வாய்மொழிக் கபிலன்' - எனப் பாராட்டியவர் யார்?

A] நக்கீரர்

B] பெருங்குன்றூர்கிழார்

C] இளங்கீரனார்

D] மறோக்கத்து நப்பசலையார்

16) 'நல்லிசைக் கபிலன்' - என கபிலரை பாராட்டியவர் யார்?

A] நக்கீரர்

B] பெருங்குன்றூர்கிழார்

C] இளங்கீரனார்

D] மறோக்கத்து நப்பசலையார்

17) 'வெறுத்த வேள்வி விளங்கு புகழ்க் கபிலன்' - என பாராட்டியவர் யார்?

A] நக்கீரர்

B] பெருங்குன்றூர்கிழார்

C] இளங்கீரனார்

D] மறோக்கத்து நப்பசலையார்

18) கபிலரை 'புலனழுக்கற்ற அந்தணாளன் பொய்யா நாவிற் கபிலன்' - என புகழ்ந்தவர் யார்?

A] நக்கீரர்

B] பெருங்குன்றூர்கிழார்

C] இளங்கீரனார்

D] மறோக்கத்து நப்பசலையார்

19) வெளிப்படையாக தெரியும் பொருளோடு பிறிதொரு பொருள் புலப்படுமாறு அமைக்கும் உத்தியானது கீழ்க்கண்டவற்றில் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A] இறைச்சி

B] உள்ளுறை

C] இறைமை

D] பயந்தோர் பழிச்சொல்

20) கூறவந்த பொருள் வெளிப்படையாக இருக்க, அதனை உணர்த்த வேறொரு பொருள் வெளிப்படையாக நிற்கும் உத்திக்கு பெயர் யாது?

A] இறைச்சி

B] உள்ளுறை

C] இறைவுமை

D] பயந்தோர் பழிச்சொல்

21) உள்ளுறை, இறைச்சி - ஆகியவற்றில் கீழ்க்கண்ட எந்த பொருளானது உவமிக்கப்படுகிறது?

A] தோழி ஒழிந்த கழிப்பொருளாக இருத்தல் வேண்டும்

B] தலைவன் ஒழிந்த கழிப்பொருளாக இருத்தல் வேண்டும்

C] தெய்வம் ஒழிந்த கழிப்பொருளாக இருத்தல் வேண்டும்

D] பெற்றோர் ஒழிந்த கழிப்பொருளாக இருத்தல் வேண்டும்

22) கபிலர் அவர்கள் பிறந்த ஊர் யாது?

A] திருநாவலூர்

B] திருக்கோவிலூர்

C] திருவாவூர்

D] திருவாதவூர்

23) வதுவை - என்ற சொல்லின் பொருள் யாது?

A] திருமணம்

B] பெண்

C] பன்றி

D] இறைச்சி

24) எரிமருள் வேங்கை யிருந்த தோகை - எனத் தொடங்கும் பாடலானது ஐங்குறுநூறு நூலில் குறிஞ்சித்திணையில் கீழ்க்கண்ட எந்த பத்தில் அமைந்துள்ளது?

A] கிள்ளைப் பத்து

B] குரக்குப் பத்து

C] மஞ்சைப் பத்து

D] அன்னாய் வாழிப் பத்து

25) குறிஞ்சித்திணையில் மஞ்சைப்பத்து பகுதியானது எத்தனையாவது பத்தாக அமைந்துள்ளது?

A] மூன்றாவது பத்து

B] ஐந்தாவது பத்து

C] ஏழாவது பத்து

D] பத்தாவது பத்து

விடைகள் - ஐங்குறுநூறு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | B | 6 | A | 11 | A | 16 | B | 21 | C |
| 2 | C | 7 | C | 12 | C | 17 | C | 22 | D |
| 3 | D | 8 | D | 13 | D | 18 | D | 23 | A |
| 4 | C | 9 | C | 14 | C | 19 | B | 24 | C |
| 5 | B | 10 | B | 15 | A | 20 | A | 25 | D |

## 3) அற இலக்கியம்

### திருக்குறள்

1) தமிழ் மாதின் இனிய உயர்நிலை என்று உலகோரால் பாராட்டப் பெறும் நூல் எது?

A] தொல்காப்பியம்

B] திருக்குறள்

C] கம்பராமாயணம்

D] சிலப்பதிகாரம்

2) திருக்குறளின் சிறப்பு யாது?

A] பெயராகுபெயர்

B] கருவியாகு பெயர்

C] அடையடுத்த ஆகுபெயர்

D] முற்றுருவகம்

3) திருக்குறள் நூலில் முதல் பிரிவான அறத்துப்பால் பிரிவில் எத்தனை இயல்கள் மற்றும் அதிகாரங்கள் உள்ளன?

A] 4 இயல்கள் + 38 அதிகாரங்கள்

B] 4 இயல்கள் + 25 அதிகாரங்கள்

C] 3 இயல்கள் + 8 அதிகாரங்கள்

D] 3 இயல்கள் + 25 அதிகாரங்கள்

4) இரண்டாம் பிரிவான பொருட்பால் பிரிவில் எத்தனை இயல்கள் மற்றும் அதிகாரங்கள் உள்ளன?

A] 2 இயல்கள் + 25 அதிகாரங்கள்

B] 3 இயல்கள் + 38 அதிகாரங்கள்

C] 4 இயல்கள் + 70 அதிகாரங்கள்

D] 3 இயல்கள் + 70 அதிகாரங்கள்

5) திருக்குறளின் கடைசி பிரிவான காமத்துப்பால் பிரிவில் எத்தனை இயல்கள் மற்றும் அதிகாரங்கள் உள்ளன?

A] 3 இயல்கள் + 25 அதிகாரங்கள்

B] 2 இயல்கள் + 25 அதிகாரங்கள்

C] 4 இயல்கள் + 38 அதிகாரங்கள்

D] 3 இயல்கள் + 70 அதிகாரங்கள்

6) அறத்துப்பாலில் இடம்பெற்றுள்ள இயல்களில் தவறானது எது?

A] பாயிரவியல்

B] இல்லறவியல்

C] அரசியல்

D] துறவறவியல்

7) பொருட்பாலில் இடம்பெற்றுள்ள இயல்களில் தவறானது எது?

A] களவியல்

B] அரசியல்

C] அங்கவியல்

D] ஒழிபியல்

8) அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள் - என்று திருக்குறளை புகழ்ந்தவர் யார்?

A] கம்பர்

B] செங்கண்ணார்

C] இடைக்கடனார்

D] ஔவையார்

9) ஆரிருள் - என்பதன் பொருள் யாது?

A] நரகம்

B] சொர்க்கம்

C] அடக்கம்

D] கடும் இருள்

10) அடங்கியான், ஆற்றுவான் - என்பதன் இலக்கண குறிப்பு யாது?

A] வினைத்தொகைகள்

B] வினையாலணையும் பெயர்கள்

C] வியங்கோள் வினைமுற்றுகள்

D] ஆன் என்னும் வாய்பாட்டு வினையெச்சம்

11) அதனினூஉங்கு - என்ற சொல்லின் இலக்கண குறிப்பு யாது?

A] செய்யுளிசை அளபெடை

B] சொல்லிசை அளபெடை

C] இன்னிசை அளபெடை

D] இயற்கை அளபெடை

12) ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்க லாற்றின் - எனத் தொடங்கும் குறளில் ஐந்து என்ற சொல்லானது கீழ்க்கண்ட எந்த பொருளை குறிக்கிறது?

A] ஐந்து என்ற எண்

B] ஐந்து வகை நிலம்

C] ஐந்து வகை திணைகள்

D] ஐம்பொறிகள்

13) அடங்கல் - என்பதன் இலக்கண குறிப்பு யாது?

A] தொழிற்பெயர்

B] ஆகுபெயர்

C] பண்புத்தொகை

D] வினைத்தொகை

14) கதங்காத்துக் கற்றடங்க லாற்றுவான் செவ்வி - என்ற குறளில் கீழ்க்கண்ட எந்த அடக்கத்தை பற்றி தெளிவாக கூறப்பட்டுள்ளது?

A] மெய் அடக்கம்

B] மொழி அடக்கம்

C] மன அடக்கம்

D] நெறி அடக்கம்

15) இடனில்பருவம் - என்பதன் பொருள் யாது?

A] இடநிலைக்காலம்

B] வறுமையுற்றகாலம்

C] வறுமையற்றகாலம்

D] வலிமையுற்றகாலம்

16) ஒல்கார் - என்பதன் இலக்கண குறிப்பு வரைக?

A] வினையாலணையும் பெயர்

B] ஆகுபெயர்

C] தொழிற்பெயர்

D] வினைத்தொகை

17) கடனறிகாட்சி - என்பதன் இலக்கண குறிப்பு தருக?

A] வினையாலணையும் பெயர்

B] ஆகுபெயர்

C] தொழிற்பெயர்

D] வினைத்தொகை

18) பகல்வெல்லுங் கூகையைக் காக்கை; இகல்வெல்லும் - எனத் தொடங்கும் குறளானது கீழ்க்கண்டவற்றின் எந்த சிறப்பை பற்றிக் கூறுகிறது?

A] காலமறிதலின் சிறப்பு

B] காலத்தது சிறப்புக் கூறப்பட்டது

C] காலம் வாராவழிச் செய்யத்தக்கது

D] காலம் வாராவழிக் காத்திருப்பதன் சிறப்பு

19) இகல் - என்னும் சொல்லின் பொருள் யாது?

A] இருள்

B] இசை

C] பகை

D] பிணி

20) ஊக்க முடையா னொடுக்கம் பொருதகர் - என்ற குறளில் தகர் என்னும் சொல்லானது கீழ்க்கண்ட எந்த விலங்கை குறிக்கிறது?

A] புலிக்குட்டி

B] உழுவைமாடு

C] பசுங்கன்று

D] ஆட்டுக்கிடாய்

21) பெய்சாகாடு - என்பதன் இலக்கண குறிப்பு யாது?

A] வினைத்தொகை

B] ஆறாம் வேற்றுமைத்தொகை

C] வியங்கோள் வினைமுற்று

D] உரிச்சொற்றொடர்

22) சாலமிகுத்து - என்ற சொல்லின் இலக்கண குறிப்பு யாது?

A] வினைத்தொகை

B] உரிச்சொற்றொடர்

C] வியங்கோள் வினைமுற்று

D] இரண்டாம் வேற்றுமைத் தொகை

23) வாழ்க்கை - என்பதன் இலக்கண குறிப்பு எழுதுக?

A] பண்புத்தொகை

B] ஆகுபெயர்

C] தொழிற்பெயர்

D] வினைத்தொகை

24) திருக்குறளின் பெருமையை உணர்த்தும் நூல் எது?

A] பழமொழி நானூறு

B] திருவள்ளுவமாலை

C] நால்வர் நான்மணிமாலை

D] தொடர்நிலைச் செய்யுள்

25) தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே - என்ற குறளில் இடம்பெற்றுள்ள அணி எது?

A] உவமையணி

B] வேற்றுமையணி

C] பிறிது மொழிதலணி

D] தொழிலுவமையணி

26) கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன் - எனத் தொடங்கும் குறளில் இடம்பெற்றுள்ள அணி எது?

A] உவமையணி

B] வேற்றுமையணி

C] பிறிது மொழிதலணி

D] தொழிலுவமையணி

27) ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம் - எனத் தொடங்கும் குறளில் இடம்பெற்றுள்ள அணி எது?

A] உவமையணி

B] வேற்றுமையணி

C] பிறிது மொழிதலணி

D] தொழிலுவமையணி

28) பீலிபெய் சாகாடு மச்சிறு மப்பண்டஞ் - என்ற குறளில் இடம்பெற்றுள்ள அணி எது?

A] உவமையணி

B] வேற்றுமையணி

C] பிறிது மொழிதலணி

D] தொழிலுவமையணி

29) புத்தேள் உலகம் - என்ற சொல்லின் பொருள் யாது?

A] புதிய உலகம்

B] தேவர் உலகம்

C] பிரம்மன் உலகம்

D] புத்தர் உலகம்

30) செறுநர் - என்பதன் பொருள் யாது?

A] பகைவர்

B] நல்லவர்

C] உறவினர்

D] நண்பர்

விடைகள் - திருக்குறள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | B | 7 | A | 13 | A | 19 | C | 25 | B |
| 2 | D | 8 | D | 14 | C | 20 | D | 26 | D |
| 3 | A | 9 | A | 15 | B | 21 | A | 27 | A |
| 4 | D | 10 | B | 16 | A | 22 | B | 28 | C |
| 5 | B | 11 | C | 17 | D | 23 | C | 29 | B |
| 6 | C | 12 | D | 18 | B | 24 | B | 30 | A |

## 4) தொடர்நிலைச் செய்யுள்

### (அ) சீவகசிந்தாமணி

1) சீவகசிந்தாமணி என்னும் காப்பியத்தை இயற்றித் தமிழன்னைக்கு அணி செய்த புலவர் யார்?

A] இளங்கோவடிகள்

B] திருத்தக்கத்தேவர்

C] சீத்தலைச்சாத்தனார்

D] தோலாமொழித்தேவர்

2) திருத்தக்கதேவர் அவர்கள் கீழ்க்கண்ட எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

A] சேர நாடு

B] பாண்டிய நாடு

C] சோழ நாடு

D] தொண்டை நாடு

3) திருத்தக்கத்தேவர் அவர்கள் கீழ்க்கண்ட எந்த சமயத்தை சேர்தவர்?

A] சைவச்சமயம்

B] வைணவச்சமயம்

C] பௌத்தச்சமயம்

D] சமணச்சமயம்

4) திருத்தக்கதேவர் எழுதிய வேறு நூல் யாது?

A] நரி விருத்தம்

B] சரஸ்வதி அந்தாதி

C] நந்திக்கலம்பகம்

D] கோமதி அந்தாதி

5) கீழ்க்கண்டவற்றில் சீவகசிந்தாமணியின் வேறு பெயர்களுள் சரியானது எது?

A] தெய்வநூல்

B] மணநூல்

C] முக்தி நூல்

D] குணநூல்

6) சீவகசிந்தாமணி நூலில் உள்ள இலம்பகங்கள் மொத்தம் எத்தனை?

A] 12

B] 11

C] 13

D] 14

7) விருத்தம் என்னும் பாவினத்தால் அமைந்த முதல் தமிழ்க் காப்பியம் என அழைக்கப்படும் நூல் எது?

A] சீவகசிந்தாமணி

B] சிலப்பதிகாரம்

C] மணிமேகலை

D] குண்டலகேசி

8) சீவகசிந்தாமணி நூலுக்கு உரை கண்ட புலவர் யார்?

A] உருத்திரசன்மார்

B] காப்பியாற்றுக் காப்பியனார்

C] பாரதம் பாடிய பெருந்தேவனார்

D] உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியார்

9) சீவகன் பிறந்த பொழுது அவன் தாய் விசயை எவ்வாறு அழைத்தார்?

A] சீவ

B] சீவகன்

C] சிந்தாமணியே

D] மணியே

10) கழலுவேகன் என்பவர் கீழ்க்கண்ட எந்த மலையிலுள்ள வித்தியாதரர் வேந்தன் ஆவார்?

A] இமயமலை

B] வெள்ளிமலை

C] மேருமலை

D] குடகுமலை

11) காந்தருவதத்தை என்பவர் கீழ்க்கண்ட யாருடைய மகள் ஆவார்?

A] கழலுவேகன்

B] சீதத்தன்

C] விசயை

D] வித்தியாதரர்

12) காந்தருவதத்தை என்பவளுக்கு கீழ்க்கண்ட எந்த இடத்தில் திருமணம் நடைபெறும் என நிமித்திகர் கூறினார்?

A] வெள்ளிமலை

B] இராமநாதபுரம்

C] இராசமாபுரம்

D] மேருமலை

13) சீதத்தன் - என்பவர் யார்?

A] அரசர்

B] நிமித்திகர்

C] அமைச்சர்

D] வணிகன்

14) கழலுவேகன் வேந்தன் தன் மகள் காந்தருவதத்தை கீழ்க்கண்ட எந்த போட்டியில் வெற்றி பெற்றவனுக்கு மணம்முடித்து கொடுக்குமாறு சீதத்தனிடம் கூறினார்?

A] விற்போட்டி

B] யாழ்போட்டி

C] மல்யுத்தம்

D] சொற்போட்டி

15) காந்தருவதத்தை கீழ்க்கண்ட யாருடன் சீதத்தனோடு இராசமாபுரத்திற்கு வருகை புரிந்தாள்?

A] வீணாதிபதி

B] லீணாபதி

C] வீணாபதி

D] வீணாபத்தி

16) காந்தருவதத்தை யாழ்மீட்டு இசைக்கும் போது கீழ்க்கண்ட எவை மெய்மறந்து நின்றன என்று கவிஞர் கூறுகிறார்?

A] கின்னர மிதுனங்கள்

B] கண்களும் மெய்யும்

C] பருந்தும் நிழலும்

D] காற்றும் கடல் அலையும்

17) காந்தருவதத்தை மற்றவர்களை யாழ்போருக்கு அழைத்த பின்னர் எத்தனை நாள்கள் வரை யாரும் தத்தைக்கு நிகராக யாழ் இசைக்க இயலாது மயங்கினர்?

A] ஏழு நாள்கள்

B] இரண்டு வாரங்கள்

C] எட்டு நாள்கள்

D] ஆறு நாள்கள்

18) நபுலன் - என்பவன் யார்?

A] சீவகன் அமைச்சர்

B] சீவகன் நண்பன்

C] சீவகன் தம்பி

D] வீணாபதி காதலன்

19) யாழ் மீட்டிய சீவகன் இசையானது கீழ்க்கண்டவற்றில் எவற்றை போன்று அவனது பாட்டும் யாழிசையின் கூட்டும் ஒத்திருந்தன என்று புலவர் கூறுகிறார்?

A] நீரும் நெருப்பும்

B] பருந்தும் நிழலும்

C] இருளும் பகலும்

D] இடியும் மின்னலும்

20) சிலைத்தொழிற் சிறுநுதற் தெய்வப் பாவைபோற் - என்ற வரியில் இடம்பெற்றுள்ள சிலை என்னும் சொல்லின் பொருள் யாது?

A] வில்

B] அம்பு

C] கற்சிலை

D] இசைக்கலை

21) கீழ்க்கண்டவற்றில் இசையோடு ஒலிப்பதில் சிறந்த பறவைகள் எது?

A] பருந்து

B] கின்னரமிதுனம்

C] கிளி

D] மரகதப்புறா

22) முறைமையறிந்து கலைத்தொழிலில் எத்தனை வகையாகப் பொருந்தப் பாடப்படுகிறது?

A] ஆறு

B] ஏழு

C] எட்டு

D] ஐந்து

23) எயிறு - என்பதன் பொருள் யாது?

A] கழுத்து

B] கண்கள்

C] கண்ணம்

D] பல்

24) மிடறு - என்பதன் பொருள் யாது?

A] கழுத்து

B] கண்கள்

C] கண்ணம்

D] தலைமுடி

25) விரிமலர்க் கோதை பாட - என்ற வரியில் இடம்பெற்றுள்ள கோதை என்னும் சொல்லின் பொருள் யாது?

A] கண்ணகி

B] காந்தருவதத்தை

C] வீணாபதி

D] தேவநந்தி

26) எழால் வகை - என்பதின் பொருள் யாது?

A] இசையின் கூறுபாடு

B] இயற்கையின் கூறுபாடு

C] யாழின் கூறுபாடு

D] கலையின் கூறுபாடு

27) எரிமலர் பவளச் செவ்வாய் - என்ற வரியில் உள்ள செவ்வாய் என்ற சொல்லானது கீழ்க்கண்ட யாரை குறிக்கிறது?

A] வீணாபதி

B] சீவகன்

C] போட்டிக்கு வந்த அந்தணர்கள்

D] காந்தருவதத்தை

28) விளங்கொளி யிவுளித் திண்டேர் - என்ற வரியில் இடம்பெற்றுள்ள இவுளி என்ற சொல்லானது கீழ்க்கண்ட எந்த விலங்கை குறிக்கிறது?

A] குதிரை

B] குரங்கு

C] சிங்கம்

D] புலி

29) பிணை - என்பதன் பொருள் யாது?

A] ஆண்மான்

B] பெண்மான்

C] ஆண்குரங்கு

D] பெண்குரங்கு

30) தடங்கண்ணாள் - என்று அழைக்கப்பட்ட பெண் யார்?

A] இராதை

B] வீணாபதி

C] தத்தை

D] சீவகனின் தாய்

31) நெடுங்கண்ணாள் - என்று அழைக்கப்பட்டவர் யார்?

A] இராதை

B] வீணாபதி

C] தத்தை

D] சீவகனின் தாய்

32) நரம்பில் பிறந்த பொல்லாமை என கூறியவற்றில் கீழ்க்கண்டவற்றில் தவறானது எது?

A] செந்தமிழ்

B] ஆர்ப்பு

C] கூடம்

D] அதிர்வு

33) நரம்பில் பிறந்த பொல்லாமைகளில் ஆர்ப்பு என்பது கீழ்க்கண்டவற்றில் எவற்றைக் குறித்தது?

A] இன்பமில் இசை

B] மழுங்கியிசைப்பது

C] சிதறியுரைக்குநர் உச்சரிப்பிசை

D] அளவிறைந்திசைப்பது

34) நரம்பில் பிறந்த பொல்லாமைகளில் கூடம் என்ற பொல்லாமையானது கீழ்க்கண்டவற்றில் எவற்றைக் குறித்தது?

A] இன்பமில் இசை

B] மழுங்கியிசைப்பது

C] சிதறியுரைக்குநர் உச்சரிப்பிசை

D] அளவிறைந்திசைப்பது

35) நரம்பில் பிறந்த பொல்லாமைகளில் அதிர்வு என்ற பொல்லாமையானது கீழ்க்கண்டவற்றில் எவற்றைக் குறித்தது?

A] இன்பமில் இசை

B] மழுங்கியிசைப்பது

C] சிதறியுரைக்குநர் உச்சரிப்பிசை

D] அளவிறைந்திசைப்பது

36) நரம்பில் பிறந்த பொல்லாமைகளில் செம்பகை என்ற பொல்லாமையானது கீழ்க்கண்டவற்றில் எவற்றைக் குறித்தது?

A] இன்பமில் இசை

B] மழுங்கியிசைப்பது

C] சிதறியுரைக்குநர் உச்சரிப்பிசை

D] அளவிறைந்திசைப்பது

37) இசை ஒழுங்கானது நரம்பின் குற்றமுடையதால் மாறுபடும். இவ்வாறு இசையொழுங்கு மாறுபடுவது____எனப்படும்?

A] யாழ்க்குற்றாதல்

B] இசைக்குற்றாதல்

C] மரக்குற்றாதல்

D] பண்குற்றாதல்

38) மரக்குற்றமானது எத்தனை வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளது?

A] 03

B] 05

C] 04

D] 06

39) பண்கள் மயங்குவதற்கு காரணமாக கூறப்படும் மரக்குற்றமாவதில் கீழ்க்கண்டவற்றில் தவறானது எது?

A] பாரிலே நிற்றல்

B] நீரிலே நிற்றல்

C] நெருப்பிலே வேகுதல்

D] கடலிலே மூழ்குதல்

40) தொழிக ஒண்பொன் னுகுகொடியே - என்ற வரியில் இடம்பெற்றுள்ள கொடி என்னும் சொல்லானது கீழ்க்கண்ட யாரைக் குறித்தது?

A] வீணாபதி

B] தத்தை

C] சீவகன்

D] யாழ் இசை

41) நோய்நான்கு - என புலவர் கூறியவற்றில் தவறானது எது?

A] மிக்கவெயில்

B] கடுங்காற்று

C] சுடுதண்ணீர்

D] தண்ணென்றநிழல்

42) பத்தர் - என்பதன் பொருள் யாது?

A] யாழியின் ஓர் உறுப்பு

B] இசையின் ஓர் உறுப்பு

C] தத்தை இசையின் ஒருபகுதி

D] சீவகன் இசையின் ஒருபகுதி

43) மாடகம் - என்பதன் பொருள் யாது?

A] யாழ் போட்டி நடைபெறும் இடம்

B] இசைப்போட்டி நடைபெறும் கோவில்

C] யாழ் நரம்பை இழுத்துக் கட்டும் கருவி

D] யாழில் காணப்படும் குற்றமுடைய நரம்பு

44) எழீஇ - என்பதன் இலக்கண குறிப்பு யாது?

A] செய்யுளிசை அளபெடை

B] சொல்லிசை அளபெடை

C] இன்னிசை அளபெடை

D] இயற்கை அளபெடை

45) சிறுநுதல், செவ்வாய் - என்பதன் இலக்கண குறிப்பு யாது?

A] வினைத்தொகைகள்

B] உரிச்சொற்றொடர்கள்

C] ஆறாம் வேற்றுமைத்தொகை

D] அன்மொழித்தொகைகள்

46) சிலைத்தொழில் - என்ற சொல்லின் இலக்கண குறிப்பு யாது?

A] உவமைத்தொகை

B] உரிச்சொற்றொடர்

C] ஆறாம் வேற்றுமைத்தொகை

D] அன்மொழித்தொகை

47) கடிமிடறு, தடங்கண் - என்ற சொல்லின் இலக்கண குறிப்பு யாது?

A] உருவகத்தொடர்

B] உரிச்சொற்றொடர்

C] ஆறாம் வேற்றுமைத்தொகை

D] பண்புத்தொகை

48) விடுகணை, வடிநுனை, விளங்கொளி - ஆகிய சொற்களின் இலக்கண குறிப்பு யாது?

A] வினைத்தொகைகள்

B] உரிச்சொற்றொடர்கள்

C] ஆறாம் வேற்றுமைத்தொகை

D] அன்மொழித்தொகைகள்

49) எரிமலர், வேற் கண்ணாள் - என்ற சொல்லின் இலக்கண குறிப்பு யாது?

A] வினைத்தொகை

B] அன்மொழித்தொகை

C] உருவகத்தொடர்

D] உவமைத்தொகை

50) சீவகசிந்தாமணி நூலில் கீழ்க்கண்ட எந்த பாவினம் பயின்று வருகிறது?

A] ஆசிரியவிருத்தம்

B] கலிவிருத்தம்

C] வெண்பாவிருத்தம்

D] வஞ்சிவிருத்தம்

51) வீரர்களின் ஏறுதழுவுதல், சுறவெறிதல், புலி கொல்லல் முதலிய வீரச் செயல்களால் கவரப்பட்டுதான் முற்காலத்தில் மகளிர் மாலையிட்டதாக கீழ்க்கண்ட எந்த நூல் கூறுகிறது?

A] புறநானூறு

B] பத்துப்பாட்டு

C] கலித்தொகை

D] நற்றிணை

52) சீவகசிந்தாமணி நூலின் நூல் அமைப்பு யாது?

A] 13 இலம்பகம் + 3145 பாடல்கள்

B] 13 இலம்பகம் + 3140 பாடல்கள்

C] 13 இலம்பகம் + 3135 பாடல்கள்

D] 13 இலம்பகம் + 3120 பாடல்கள்

53) சீவகனின் ஆசிரியர் பெயர் யாது?

A] சச்சந்தன்

B] கந்துக்கடன்

C] கழலுவேகன்

D] அச்சணந்தி

54) சீவகன் வளர்ப்புத் தந்தையின் பெயர் யாது?

A] சச்சந்தன்

B] கந்துக்கடன்

C] கழலுவேகன்

D] அச்சணந்தி

55) சீவகன் தன் வாழ்க்கையில் மொத்தம் எத்தனை மங்கையரை மணம் புரிந்தான்?

A] 03

B] 05

C] 08

D] 04

56) சீவகன் மன்னன் சீறும் சிறப்புமாக எத்தனை ஆண்டுகள் நல்லாட்சி புரிந்தான்?

A] 20 ஆண்டுகள்

B] 30 ஆண்டுகள்

C] 25 ஆண்டுகள்

D] 15 ஆண்டுகள்

57) திருத்தக்கத்தேவர் தம் நூலின் உட்பிரிவிற்கு கீழ்க்கண்ட எந்த பெயரை சூட்டினார்?

A] அந்தாதி

B] பிரிவுகள்

C] பகுதிகள்

D] இலம்பகம்

58) சீவகசிந்தாமணி நூலில் இடம்பெற்றுள்ள இலம்பகங்களில் எத்தனையாவது இலம்பகம் மட்டும் மகளிர் பெயரில் இடம்பெறாமல் அமையப்பெற்றுள்ளது?

A] முதல் இலம்பகம்

B] பதிமூன்றாவது இலம்பகம்

C] எட்டாவது இலம்பகம்

D] பத்தாவது இலம்பகம்

59) கீழ்க்கண்ட எந்த நூலானது செல்வ நிலையாமை மற்றும் யாக்கை நிலையாமை பற்றிக் கூறுகிறது?

A] சிலப்பதிகாரம்

B] கத்திய சிந்தாமணி

C] மணிமேகலை

D] நரிவிருத்தம்

60) தமிழ்க் கவிஞர்களுள் சிற்றரசர் - என்று திருத்தக்கதேவரை புகழ்ந்தவர் யார்?

A] வீரமாமுனிவர்

B] ஜியார்ஜ் யூக்ளோ போப்

C] கால்டுவெல்

D] பாரதிதாசன்

61) சீவகசிந்தாமணி நூலுக்கு ஆசிரியர் இட்ட பெயர் யாது?

A] கத்தியசிந்தாமணி

B] ஸ்ரீபுராணம்

C] சிந்தாமணியின் சரிதம்

D] சீவகன் வரலாறு

62) சீவகசிந்தாமணி நூலானது கீழ்க்கண்ட எந்த வடமொழி நூல்களில் தழுவி எழுதப்படவில்லை?

A] கத்திய சிந்தாமணி

B] சத்திய சிந்தாமணி

C] சத்திர சூடாமணி

D] ஸ்ரீபுராணம்

63) சீவகசிந்தாமணி நூலானது கீழ்க்கண்ட எந்த வடமொழி நூலை முதன்மையாக வைத்து தழுவி எழுதப்பெற்றது?

A] கத்திய சிந்தாமணி

B] சிந்தாமணி சரிதம்

C] ஸ்ரீபுராணம்

D] சத்திர சூடாமணி

64) கீழ்க்கண்டவற்றில் சீவகனின் தம்பியரில் தவறாக கூறப்பட்டுள்ளவர் யார்?

A] நந்தட்டன்

B] சீதத்தன்

C] நபுலன்

D] விபுலன்

65) கட்டியங்காரன் - என்பவர் சீவனுக்கு யார்?

A] சீவகனின் அமைச்சர்

B] சீவகனின் தந்தை

C] சீவகனின் மாமன்

D] சீவகனின் வளர்ப்புத் தந்தை

66) சீவகசிந்தாமணி நூலில் காந்தருவத்தத்தை இலம்பகமானது எத்தனையாவது இலம்பகமாக இடம்பெற்றுள்ளது?

A] இரண்டாவது இலம்பகம்

B] ஆறாவது இலம்பகம்

C] நான்காவது இலம்பகம்

D] மூன்றாவது இலம்பகம்

67) சீவகசிந்தாமணி நூலை இலியட் மற்றும் ஒடிஸி நூலுடன் ஒப்பிட்ட புலவர் யார்?

A] வீரமாமுனிவர்

B] ஜியார்ஜ் யூக்ளோ போப்

C] கால்டுவெல்

D] பாரதிதாசன்

68) கீழ்க்கண்டவற்றில் சீவகனுக்கு நண்பனாக கூறப்பட்டவர்களில் தவறானவர் யார்?

A] நந்தட்டன்

B] புத்திசேனன்

C] புதுமகன்

D] தேவதத்தன்

69) முடிபொருள் தொடர்நிலைச் செய்யுள் - என அழைக்கப்படும் நூல் எது?

A] சிலப்பதிகாரம்

B] மணிமேகலை

C] மனோன்மணியம்

D] சீவகசிந்தாமணி

70) திருத்தக்க தேவர் அவர்கள் சீவகசிந்தாமணி நூலை கீழ்க்கண்ட எத்தனை நாள்களில் எழுதி முடித்ததாக இலக்கியங்களில் கூறப்படுகிறது?

A] ஆறு நாள்கள்

B] ஒரு வாரம்

C] எட்டு நாள்கள்

D] எட்டு வாரங்கள்

விடைகள் - சீவகசிந்தாமணி

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | B | 15 | C | 29 | B | 43 | C | 57 | D |
| 2 | C | 16 | A | 30 | C | 44 | B | 58 | B |
| 3 | D | 17 | D | 31 | B | 45 | D | 59 | D |
| 4 | A | 18 | C | 32 | A | 46 | C | 60 | A |
| 5 | B | 19 | B | 33 | D | 47 | B | 61 | C |
| 6 | C | 20 | A | 34 | B | 48 | A | 62 | B |
| 7 | A | 21 | B | 35 | C | 49 | D | 63 | D |
| 8 | D | 22 | C | 36 | A | 50 | B | 64 | B |
| 9 | C | 23 | D | 37 | C | 51 | C | 65 | C |
| 10 | B | 24 | A | 38 | B | 52 | A | 66 | D |
| 11 | A | 25 | B | 39 | D | 53 | D | 67 | B |
| 12 | C | 26 | C | 40 | A | 54 | B | 68 | A |
| 13 | D | 27 | D | 41 | C | 55 | C | 69 | D |
| 14 | B | 28 | A | 42 | A | 56 | B | 70 | C |

## (ஆ) சீறாப்புராணம்

1) சீறத் - என்பது எந்த மொழிச் சொல்லாகும்?

A] தமிழ் மொழி

B] வடமொழி

C] அரபு மொழி

D] இலத்தீன் மொழி

2) சீறா - என்பதன் பொருள் யாது?

A] காப்பியம்

B] வாழ்க்கை

C] வரலாறு

D] பதிகம்

3) சீறாப்புராண நூலின் நூல் அமைப்பு யாது?

A] 3 பிரிவு + 5027 விருத்தப்பாக்கள்

B] 3 பிரிவு + 5025 விருத்தப்பாக்கள்

C] 2 பிரிவு + 5027 விருத்தப்பாக்கள்

D] 3 பிரிவு + 5030 விருத்தப்பாக்கள்

4) பெருமனார் பிறந்ததும், இளமை நிகழ்வுகளும் திருமணமும் கீழ்க்கண்ட எந்த பிரிவில் கூறப்பட்டுள்ளன?

A] நுபுவ்வத்துக் காண்டம்

B] ஹிஜ்ரத்துக் காண்டம்

C] விலாத்துக்காண்டம்

D] விலாதத்துக் காண்டம்

5) வானவர் ஜிப்றாயில் மூலம் திருமறைநபிகள் பெருமானருக்கு அருளப்பட்டதும் அதன்பின் மக்கத்தில் நடந்தவையும் கீழ்க்கண்ட எந்த பிரிவில் கூறப்பட்டுள்ளன?

A] நுபுவ்வத்துக் காண்டம்

B] ஹிஜ்ரத்துக் காண்டம்

C] விலாத்துக்காண்டம்

D] விலாதத்துக் காண்டம்

6) மக்கத்தை விட்டுப் பெருமனார் மதீனம் சென்றதும் தீன் நிலை நிறுத்தற்காக நிகழ்ந்த போர்களும் பிறவும் கீழ்க்கண்ட எந்த பிரிவில் கூறப்பட்டுள்ளன?

A] நுபுவ்வத்துக் காண்டம்

B] ஹிஜ்ரத்துக் காண்டம்

C] விலாத்துக்காண்டம்

D] விலாதத்துக் காண்டம்

7) பொருத்துக

1) விலாதத்துக் காண்டம் - செலவியற்காண்டம்;

2) நுபுவ்வத்துக்காண்டம் - பிறப்பியற்காண்டம்

3) ஹிஜ்ரத்துக் காண்டம் - செம்பொருட்காண்டம்;

A] 1 2 3

B] 3 1 2

C] 2 3 1

D] 1 3 2

8) நபிகள் பெருமானாரின் தூய திருவாழ்வு முழுமையும் பாடிமுடித்த புலவர் யார்?

A] உமறுப்புலவர்

B] கடிகை முத்துப்புலவர்

C] சீதக்காதி

D] பனு அகமது மரைக்காயர்

9) யார் வேண்டுகோளின்படி உமறுப்புலவர் அவர்கள் சீறாப்புறாணத்தை எழுதத் தொடங்கினார்?

A] கடிகை முத்துப்புலவர்

B] செய்கு அப்துல் காதிர் மரைக்காயர்

C] எட்டயப்புர மன்னர்

D] அபுல் காசீம்

10) சீதக்காதி வள்ளல் இறந்த பிறகு சீறாப்புராணம் எழுத உமறுப்புலவருக்கு உதவி புரிந்த வள்ளல் யார்?

A] பனு அகமது மரைக்காயர்

B] செய்கு அப்துல் காதிர் மரைக்காயர்

C] எட்டயப்புர மன்னர்

D] அபுல் காசீம்

11) உமறுப்புலவர் அவர்கள் சீறாப்புராணம் நூலில் கீழ்க்கண்ட யாரை நூலின் பல இடங்களில் நினைவு கூர்ந்து போற்றி இருக்கிறார்?

A] அபுல் காசீம்

B] பனு அகமது மரைக்காயர்

C] சீதக்காதி வள்ளல்

D] கடிகை முத்துப்புலவர்

12) உமறுப்புலவர் இயற்றிய வேறுநூல் எது?

A] நான்மணிமாலை

B] முதுமொழிமாலை

C] நபிகள் அந்தாதி

D] முகுந்தமாலை

13) முதுமொழிமாலை - என்ற நூலானது கீழ்க்கண்ட எத்தனை பாக்களை கொண்ட நூலாகும்?

A] எழுபது பாக்கள்

B] நூற்றைம்பது பாக்கள்

C] எழுபத்தைந்து பாக்கள்

D] எண்பது பாக்கள்

14) உமறுப்புலவர் வாழ்ந்த காலம் எது?

A] பதினாறாம் நூற்றாண்டு

B] பதினெட்டாம் நூற்றாண்டு

C] பதினேழாம் நூற்றாண்டு

D] பத்தொன்பதாம் நூற்றாண்டு

15) பகைவர்களுக்குப் புலப்படாவாறு நபிகள் பெருமானார் அபூபக்கர் என்ற தம் துணைவரோடு எந்த மலைக்குகையில் தங்கியிருந்தார்கள்?

A] வெள்ளி மலைக்குகை

B] தௌர் மலைக்குகை

C] தளர் மலைக்குகை

D] இமயமலைக்குகை

16) மறைநபி துயிலா நின்றமலைமுழை யதனின் கண்ணே - என்ற வரியில் முழை என்ற சொல்லின் பொருள் யாது?

A] பாம்பு

B] மலை

C] குகை

D] புற்று

17) உரகம், பணி, பாந்தள், பன்னகம், பணி, அரவு - என்ற சொல்லானது கீழ்க்கண்ட எந்த பொருளைத் தருகிறது?

A] பாம்பு

B] துன்பம்

C] குகை

D] மணம்

18) நறை - என்ற சொல்லின் பொருள் யாது?

A] கல்

B] தேன்

C] பாம்பு

D] பேரொளி

19) துயிலாநின்ற - என்ற சொல்லை பிரித்தெழுதுக?

A] துயில் + ஆ + நின்ற

B] துயில் + ஆநின் + அ

C] துயிலா + ஆனின் + அ

D] துயில் + ஆநின்று + அ

20) மலைமுழை - என்ற சொல்லின் இலக்கண குறிப்பு யாது?

A] ஆறாம் வேற்றுமைத் தொகை

B] ஏழாம் வேற்றுமைத் தொகை

C] இரண்டாம் வேற்றுமைத் தொகை

D] நான்காம் வேற்றுமைத் தொகை

21) மதிமுகம், மலர்த்தாள் - என்ற சொல்லின் இலக்கண குறிப்பு யாது?

A] பண்புத்தொகை

B] வினைத்தொகை

C] உவமைத்தொகை

D] உரிச்சொற்றொடர்

22) கடிநறை - என்ற சொல்லின் இலக்கண குறிப்பு யாது?

A] அன்மொழித்தொகை

B] இருபெயொரொட்டுத் பண்புத்தொகை

C] உவமைத்தொகை

D] உரிச்சொற்றொடர்

23) சின்னச்சீறா என்றழைக்கப்படும் நூலை இயற்றியவர் யார்?

A] அபுல் காசீம்

B] பனு அகமது மரைக்காயர்

C] சீதக்காதி வள்ளல்

D] கடிகை முத்துப்புலவர்

24) பாடப்பகுதியில் உள்ள விடமீட்ட படலமானது கீழ்க்கண்ட எந்த காண்டத்தில் இடம்பெற்றுள்ளது?

A] விலாதத்துக்காண்டம்

B] நுபுவத்துக்காண்டம்

C] ஹிஜ்ரத்துக்காண்டம்

D] பிறப்பியற்காண்டம்

25) விடமீட்ட படலமானது இரண்டாவது பாகத்தில் எத்தனையாவது படலமாக அமைந்துள்ளது?

A] நான்காவது படலம்

B] முதல் படலம்

C] இரண்டாவது படலம்

D] மூன்றாவது படலம்

26) சீறாப்புராண நூலில் அமைந்துள்ள மொத்தப்படலங்கள் எத்தனை?

A] 97 படலங்கள்

B] 96 படலங்கள்

C] 91 படலங்கள்

D] 93 படலங்கள்

27) விலாதத்துக் காண்டத்தில் இடம்பெற்றுள்ள படலங்கள் மொத்தம் எத்தனை?

A] 22 படலங்கள்

B] 23 படலங்கள்

C] 21 படலங்கள்

D] 24 படலங்கள்

28) நுபுவ்வத்துக் காண்டத்தில் இடம்பெற்றுள்ள படலங்கள் மொத்தம் எத்தனை?

A] 22 படலங்கள்

B] 23 படலங்கள்

C] 21 படலங்கள்

D] 24 படலங்கள்

29) எட்டயப்புர அரசவையில் கடிகை முத்துப்புலவரை வாதிற்கு அழைத்தவர் யார்?

A] எட்டயப்புர தலைமைக் கவிஞர்

B] உமறுப்புலவர்

C] பனு அகமது மரைக்காயர்

D] வாலை வாரிதி

30) எட்டயப்புர அரசவையில் உமறுப்புலவரால் தோற்கடிக்கப்பட்ட புலவர் யார்?

A] வாலை வாரிதி

B] கடிகை முத்துப் புலவர்

C] அபுல் காசீம்

D] அப்துல் காதிர் மரைக்காயர்

விடைகள் - சீறாப்புராணம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | C | 7 | C | 13 | D | 19 | D | 25 | A |
| 2 | B | 8 | D | 14 | C | 20 | B | 26 | C |
| 3 | A | 9 | B | 15 | B | 21 | C | 27 | B |
| 4 | D | 10 | D | 16 | C | 22 | D | 28 | C |
| 5 | A | 11 | A | 17 | A | 23 | B | 29 | D |
| 6 | B | 12 | B | 18 | B | 24 | C | 30 | A |

## (இ) மனோன்மணீயம்

1) நாடகக் காப்பியங்களால் சிறப்புப் பெற்று விளங்கும் வடமொழிக்கு ஈடாக நடிப்புச் செவ்வியும் இலக்கியச் செவ்வியும் ஒருங்கே அமையப் பெற்ற நூல் எது?

A] சிலப்பதிகாரம்

B] மனோன்மணீயம்

C] மணிமேகலை

D] சீவகசிந்தாமணி

2) மனோன்மணீயம் - என்ற நூலானது கீழ்க்கண்ட எந்த ஆங்கில நூலின் தழுவலாக அமைந்தது?

A] ஒத்தெல்லோ

B] மோட்சபயணம்

C] இரகசிய வழி

D] இலியட்

3) இரகசிய வழி என்ற ஆங்கில நூலை எழுதியவர் யார்?

A] ரிப்பன் பிரபு

B] கானிங் பிரபு

C] ஜி.யு.போப்

D] லிட்டன் பிரபு

4) பெருங்காப்பிய நூல்களுக்குரிய இயற்கை வண்ணனை, கற்பனையெழில், தத்துவச் செறிவு, உலகியல் உண்மை முதலிய கருத்துக்கள் அமைய எழுதப் பெற்றிருப்பினும் செய்யுளில் நடையில் மிடுக்குடனும் நாடகத்தன்மைக்கேற்ற உரையாடற் சிறப்பு பெற்ற நூல் எது?

A] சிலப்பதிகாரம்

B] குண்டலகேசி

C] மனோன்மணீயம்

D] கம்பராமாயணம்

5) அங்கங்களையும் காட்சிகளையும் அமைத்து எழுதுவது கீழ்க்கண்ட எதன் மரபாக கூறப்படுகிறது?

A] காப்பிய நன்னூல் மரபு

B] நாடக நன்னூல் மரபு

C] சிறுகதை நன்னூல் மரபு

D] கவிதை நன்னூல் மரபு

6) மனோன்மணீயம் நூலானது எத்தனை அங்கங்களையும் எத்தனை காட்சிகளையும் கொண்டது?

A] 5 அங்கங்கள் + 20 காட்சிகள்

B] 5 அங்கங்கள் + 30 காட்சிகள்

C] 4 அங்கங்கள் + 20 காட்சிகள்

D] 4 அங்கங்கள் + 30 காட்சிகள்

7) மனோன்மணீயம் நூலில் இடம்பெற்றுள்ள துணைக் கதையின் பெயர் யாது?

A] சிவகாமி சபதம்

B] சிவகாமி சரித்திரம்

C] சிவகாமி சரிதம்

D] சிவகாமி சகாப்தம்

8) மனோன்மணீயம் - என்ற நூலை எழுதியவர் யார்?

A] திருவாவடுதுறை மீனாட்சி சுந்தரம் பிள்ளை

B] பேராசிரியர் பெ.சுந்தரம் பிள்ளை

C] கோடக நல்லூர் சுந்தர சுவாமிகள்

D] சாமிநாதப் பிள்ளை

9) பேராசிரியர் பெ.சுந்தரம் பிள்ளை அவர்கள் கீழ்க்கண்ட எந்த ஊரில் பிறந்தார்?

A] ஆலப்புழை

B] திருவனந்தபுரம்

C] கோட்டயம்

D] கொச்சி

10) பெ.சுந்தரம் பிள்ளை அவர்கள் பேராசிரியராக பணியாற்றிய இடம் எது?

A] கொச்சி அரசினர் கல்லூரி

B] கோட்டயம் அரசினர் கல்லூரி

C] ஆலப்புழை அரசினர் கல்லூரி

D] திருவனந்தபுரம் அரசினர் கல்லூரி

11) பெ.சுந்தரம் பிள்ளை அவர்கள் கல்லூரியில் கீழ்க்கண்ட எந்த பாடத்திற்கு பேராசிரியாக பணிபுரிந்தார்?

A] தமிழ்ப்பாடம்

B] தத்துவப்பாடம்

C] வானவில்பாடம்

D] பொறியியல்பாடம்

12) பேராசிரியர் பெ.சுந்தரம் பிள்ளை அவர்கள் கீழ்க்கண்ட யாரை தன் ஞானாசிரியராக கொண்டார்?

A] மீனாட்சி சுந்தரம் பிள்ளை

B] உ.வே.சாமிநாதப்பிள்ளை

C] கோடக நல்லூர் சுந்தர சுவாமிகள்

D] கோடக நல்லூர் மீனாட்சி சுவாமிகள்

13) பேராசிரியர் இயற்றிய நூல்களில் கீழ்க்கண்டவற்றில் தவறானது எது?

A] நூல் தொகை விளக்கம்

B] திருஞானசம்பந்தர் கால ஆராய்ச்சி

C] திருவிதாங்கூர் பண்டை மன்னர்கால ஆராய்ச்சி

D] திருநாவுக்கரசர் கால ஆராய்ச்சி

14) தமிழக அரசின் தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடலான நீராருங்கடலுடத்த பாடலை இயற்றியவர் யார்?

A] பாரதிதாசன்

B] பெ.சுந்தரம் பிள்ளை

C] மீனாட்சி சுந்தரம் பிள்ளை

D] மாயூரம் வேதநாயகம் பிள்ளை

15) ஜீவகன் மன்னனின் உள்ளமானது கீழ்க்கண்ட எவற்றிற்கு உவமையாக கூறப்பட்டுள்ளது?

A] பனித்துளி

B] முத்துச்சிப்பி

C] பளிங்குபோல

D] தேனைப்போல

16) ஜீவகன் மன்னனின் பழம்பதி ஊர் எது?

A] மதுரை

B] திருநெல்வேலி

C] திருச்சிராப்பள்ளி

D] சிதம்பரம்

17) ஜீவகன் மன்னன் தன் பழம்பதி ஊரை விட்டு கீழ்க்கண்ட எந்த இடத்தில் கோட்டையமைத்து தங்கினான்?

A] மதுரை

B] திருநெல்வேலி

C] திருச்சிராப்பள்ளி

D] சிதம்பரம்

18) புதிய கோட்டை வலிமையற்றதாக இருப்பதனையும் பகைவர் வந்து தாக்குவாராயின் விரைவில் வீழ்ந்து விடும் என்பதனையும் உணர்ந்து கீழ்க்கண்ட யார் தனக்கு ஓர் அறையை வேண்டி பெற்றவர் யார்?

A] ஜீவகன்

B] குடிலன்

C] பலதேவன்

D] சுந்தர முனிவர்

19) ஜீவகனின் மகளான மனோன்மணி கீழ்க்கண்ட யாரை தன் கனவில் கண்டு காதல் வயப்பட்டாள்?

A] பாண்டிய மன்னர் பலதேவன்

B] சேர மன்னர் புருடோத்தமன்

C] சோழ மன்னன் தொண்டைமான்

D] பல்லவ மன்னன் மகேந்திரவர்மன்

20) போர்க்குறி - என்பதன் இலக்கண குறிப்பு யாது?

A] வினைத்தொகை

B] அன்மொழித்தொகை

C] ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கை தொகை

D] வியங்கோள் வினைமுற்று

21) சுந்தரம் பிள்ளையைப் போற்று முகமாகத் தமிழக அரசு நிறுவியது?

A] பல்கலைக்கழகம்

B] அரசவைக்கவிஞர்பணி

C] அறக்கட்டளை

D] கல்விக்கூடம்

22) எந்த ஆண்டின் போது மனோன்மணீயம் நூலானது பெ.சுந்தரம் பிள்ளையால் வெளியிடப்பட்டது?

A] 1890

B] 1892

C] 1891

D] 1893

23) மனோன்மணீயத்தில் இடம்பெற்றுள்ள தமிழ்த்தாய் பாடலான நீராருங் கடலுடுத்த என்ற பாடலானது தமிழ் நாடு அரசினால் எந்த ஆண்டு தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடலாக அறிவிக்கப்பட்டது?

A] 1965

B] 1971

C] 1969

D] 1970

24) தமிழ்நாட்டின் தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடலான நீராருங் கடலுடுத்த பாடலானது பெ.சுந்தரம் பிள்ளையின் கீழ்க்கண்ட எந்த நூலில் இடம்பெற்றுள்ளது?

A] நூல் தொகை விளக்கம்

B] மனோன்மணீயம்

C] திருவிதாங்கூர் பண்டை மன்னர்கால ஆராய்ச்சி

D] திருஞானசம்பந்தர் கால ஆராய்ச்சி

25) கீழ்க்கண்டவற்றில் யார் சென்னை மாகாண அரசின் ராவ்பகதூர் விருதை பெற்றார்?

A] பெ.மீனாட்சி சுந்தரம்பிள்ளை

B] மீனாட்சி சுந்தரனார்

C] பாரதிதாசன்

D] வேதநாயகம் பிள்ளை

## விடைகள் - மனோன்மணீயம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | B | 6 | A | 11 | B | 16 | A | 21 | A |
| 2 | C | 7 | C | 12 | C | 17 | B | 22 | C |
| 3 | D | 8 | B | 13 | D | 18 | D | 23 | D |
| 4 | C | 9 | A | 14 | B | 19 | B | 24 | B |
| 5 | B | 10 | D | 15 | C | 20 | C | 25 | A |

## (ஈ) குயில்பாட்டு

1) 'பாட்டினைப்போல் ஆச்சரியம் பாரின் மிசை இல்லையடா!' - என்று வியந்தவர் யார்?

A] பாரதிதாசன்

B] முடியரசன்

C] பாரதியார்

D] சுரதா

2) பாரதியார் அவர்கள் கீழ்க்கண்ட எந்த இரு இதழ்களை வெளியிட்டு கட்டுரைகளாலும் கருத்துப் படங்களாலும் ஆங்கிலேய ஆட்சியாளர்களைத் திணறச் செய்தார்?

A] இந்தியா, விஜயா

B] பாலபாரதம், சூர்யோதயம்

C] சக்கரவர்த்தினி, சுதேசிமித்ரன்

D] கர்மயோகி, இந்தியா

3) பாரதியார் எழுதிய கவிதை எழுதிய நூல்களில் கீழ்க்கண்டவற்றில் தவறானது எது?

A] பாஞ்சாலி சபதம்

B] சந்திரிகையின் கதை

C] கண்ணன் பாட்டு

D] குயில்பாட்டு

4) பாரதியார் எழுதிய உரைநடை நூல்களில் தவறானது எது?

A] ஞானரதம்

B] சந்திரிகையின் கதை

C] தராசு

D] பாரதியார் நூல்கள்

5) கீழ்க்கண்ட யாருடைய வசன கவிதைகளானது வால்ட்விட்மன் கலீல் கிப்ரான் முதலிய கவிஞர்களின் கவிதைகளோடு ஒப்பிடப்படுகிறது?

A] பாரதியார்

B] பாரதிதாசன்

C] திரு.வி.க

D] நா.காமராசன்

6) கானப் பறவை கலகலெனு மோசையிலும் - எனத் தொடங்கும் பாடலை பாடிய புலவர் யார்?

A] திவ்வியக்கவி

B] தேசியக்கவி

C] தெய்வக்கவி

D] அரசக்கவி

7) கானப் பறவை கலகலெனு மோசையிலும் - எனும் பாடலானது பாரதியாரின் கீழ்க்கண்ட எந்த நூலில் உள்ளது?

A] கண்ணன் பாட்டு

B] பாஞ்சாலி சபதம்

C] தராசு

D] குயில்பாட்டு

8) கானப்பறவை - என்னும் சொல்லின் இலக்கண குறிப்பு யாது?

A] இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத்தொகை

B] ஏழாம் உருபும் பயனும் உடன் தொக்கத்தொகை

C] உரிச்சொற்றொடர்

D] உவமைத்தொகை

9) வளைக்கரங்கல் - என்ற சொல்லின் இலக்கண குறிப்பு யாது?

A] இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத்தொகை

B] ஏழாம் உருபும் பயனும் உடன் தொக்கத்தொகை

C] உரிச்சொற்றொடர்

D] உவமைத்தொகை

10) கோற்றொடியார் - என கீழ்க்கண்டவற்றில் பாரதியார் யாரைக் குறிப்பிடுகிறார்?

A] புல்லாங்குழல்

B] ஆழக்கடல்

C] பெண்கள்

D] குயிலின் இசை

11) பாரத நாடு பழம்பெரும் நாடு நீரதன் புதல்வீர் இந்நிலைவற்றாதீர் - என்ற பாடியவர் யார்?

A] நாமக்கல் கவிஞர்

B] வள்ளலார்

C] திரு.வி.க

D] பாரதியார்

12) ஆரிய பூமியில் நாரியரும் - என்று பாடியவர் யார்?

A] பாரதிதாசன்

B] பாரதியார்

C] முடியரசன்

D] நா.காமராசன்

13) சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு தேக்கியநல் வாய்க்காலும் வகைப்படுத்தி - என்று வரிப்பாடல்களை பாடிய புலவர் யார்?

A] அப்துல் ரகுமான்

B] சிற்பி பாலசுப்ரமணியம்

C] பாரதிதாசன்

D] நாமக்கல் கவிஞர்

விடைகள் - குயில்பாட்டு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | C | 2 | A | 3 | B | 4 | D | 5 | A |
| 6 | B | 7 | D | 8 | B | 9 | A | 10 | C |
| 11 | D | 12 | B | 13 | C | | | | |

## 5) சிற்றிலக்கியங்கள்

### (அ) அழகர் கிள்ளைவிடு தூது

1) அதியமானின் தூதராக ஔவை சென்றதை கீழ்க்கண்ட எந்த நூல் தெரிவிக்கிறது?

A] புறநானூறு

B] குறுந்தொகை

C] அகநானூறு

D] கலித்தொகை

2) தூதின் இலக்கணம் கூறும் நூல் எது?

A] தொல்காப்பியம்

B] இலக்கண விளக்க பாட்டியல்நூல்

C] தண்டியலங்காரம்

D] மாறனலங்காரம்

3) தூது இலக்கியமானது கீழ்க்கண்ட எந்த வெண்பால் பாடப்பெற வேண்டும்?

A] நேரிசைக் கலிவெண்பா

B] ஒத்தாழிசைக் கலிவெண்பா

C] வெண்டளை விரவிய கலிவெண்பா

D] கொச்சகக்கலிவெண்பா

4) கீழ்க்கண்ட எந்த மலையில் கோயில் கொண்டிருக்கும் அழகரிடத்து பலபட்டைச் சொக்கநாத பிள்ளை என்ற புலவர் கிளியைத் தூதுவிடுவதாக அமைத்து பாடியிருக்கிறார்?

A] திருமலை

B] திருவெண்ணெய்நல்லூர்

C] திருச்சிராப்பள்ளி

D] திருமாலிருஞ்சோலை

5) அழகர் கிள்ளைவிடு தூது நூலானது ஏறக்குறைய எத்தனை ஆண்டுகளுக்கு முந்தைய நூலாக கூறப்படுகிறது?

A] 200 ஆண்டுகள்

B] 250 ஆண்டுகள்

C] 300 ஆண்டுகள்

D] 400 ஆண்டுகள்

6) அழகர் கிள்ளைவிடு தூது நூலின் நூல் அமைப்பு யாது?

A] 1 காப்பு வெண்பா + 230 கண்ணிகள்

B] 2 காப்பு வெண்பா + 237 கண்ணிகள்

C] 1 காப்பு வெண்பா + 239 கண்ணிகள்

D] 3 காப்பு வெண்பா + 235 கண்ணிகள்

7) கண்ணி - என்பது கீழ்க்கண்ட எவற்றைக் குறிப்பது?

A] பாட்டின் மூன்று அடிகள் பாடுவது

B] பாட்டின் நான்கு அடிகள் பாடுவது

C] பாட்டின் ஆறடிகள் பாடுவது

D] பாட்டின் இரண்டடிகள் பாடுவது

8) பலபட்டைச் சொக்கநாத பிள்ளை அவர்கள் இயற்றிய வேறுநூல்களில் சரியானது எது?

A] மதுரை மும்மணிக்கோவை, தென்றல் விடு தூது

B] யமகவந்தாதி, தேவையுலா

C] பூவை விடு தூது, இலம்பகயுலா

D] நான்மணிக்கோவை, மலர் விடு தூது

9) அரன் - என்னும் சொல்லின் பொருள் யாது?

A] விஷ்ணு

B] சிவன்

C] அரக்கன்

D] சிங்கம்

10) வரைத் தடந் தோளவுணன் வன்காயங் கூட்டி - என்ற வரியில் இடம்பெற்றுள்ள அவுணன் என்ற சொல்லின் பொருள் யாது?

A] திருமால்

B] சிவன்

C] இரணியன்

D] பிரகலாதன்

11) அரிவடிவு மாய்ப்பின் னரன்வடிவு மாகிப் - என்ற வரியில் இடம்பெற்றுள்ள அரி என்ற சொல்லானது கீழ்க்கண்ட யாரைக் குறிக்கிறது?

A] திருமால்

B] சிவபெருமான்

C] இரணியன்

D] சிங்கம்

12) பாதவத்தை - என்னும் சொல்லானது கீழ்க்கண்ட எந்த மரங்களை குறிக்கிறது?

A] மருத மரங்கள்

B] முல்லை மரங்கள்

C] நெல்லை மரங்கள்

D] குறிஞ்சி மரங்கள்

13) பண்ணுந் தொழிலைப் பகைத்துநிலக் காப்புமணிந் - என்ற வரியில் இடம்பெற்றுள்ள பண்ணும் என்னும் சொல்லானது கீழ்க்கண்ட எந்த தொழிலைக் குறிக்கிறது?

A] படைத்தல் தொழில்

B] அழித்தல் தொழில்

C] காத்தல் தொழில்

D] உழவுத் தொழில்

14) கொல்லைக் பெண்ணைக் குதிரையாக்குந் திருப்புயத்தான் - என்ற வரியில் இடம்பெற்றுள்ள பெண்ணை என்ற சொல்லானது கீழ்க்கண்ட எந்த மரத்தை குறித்தது?

A] தென்னை மரம்

B] பனை மரம்

C] வாழைமரம்

D] கொடிமரம்

15) புயவழகைக் கண்டு மகளிர் மடலேறுவர் என்ற கருத்தானது கீழ்க்கண்ட எந்த நூல் மூலம் நாம் அறியலாம்?

A] சிறிய திருமடல்

B] பெரிய திருமொழி

C] பெருமாள் திருமொழி

D] பெரிய திருமடல்

16) அழகர் கிள்ளைவிடு தூதில் கவிக்கு பொருட்டாக கீழ்க்கண்ட யாருடைய மாணக்கரான கணிகண்ணரை சொக்கநாதப் பிள்ளை அவர்கள் குறிப்பிடுகிறார்?

A] நம்மாழ்வார்

B] திருமழிசையாழ்வார்

C] பொய்கையாழ்வார்

D] திருமங்கையாழ்வார்

17) பாம்புப் படுக்கையைத் தோளில் தூக்கிக் கொண்டு கீழ்க்கண்ட யாருடைய பின்னால் திருமால் சென்றதாக சொக்கநாதப் பிள்ளை அவர்கள் குறிப்பிடுகிறார்?

A] திருமழிசையாழ்வார்

B] முதலாம் பராந்தகன்

C] கணிக்கண்ணார்

D] திருமங்கையாழ்வார்

18) கீழ்க்கண்ட எந்த காட்டை சொக்கநாதப் பிள்ளை அவர்கள் வன்கானகம் என்று குறிப்பிடுகிறார்?

A] காண்டவ வனம்

B] தண்டகாரணியம்

C] தாருகாவனம்

D] சுவேதாரண்யம்

19) சேய்மை, அணியன், என் சிந்தையுள் நின்றமாயன் - ஆகிய சொற்கள் கீழ்க்கண்ட யாருடைய பாசுரங்கள் ஆகும்?

A] திருமங்கையாழ்வார்

B] திருமழிசையாழ்வார்

C] குலசேகரயாழ்வார்

D] நம்மாழ்வார்

20) மலர்க்கால் - என்ற சொல்லின் இலக்கண குறிப்பு யாது?

A] பண்புத்தொகை

B] வினைத்தொகை

C] உவமைத்தொகை

D] உரிச்சொற்றொடர்

விடைகள் - அழகர் கிள்ளைவிடு தூது

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | A | 5 | B | 9 | B | 13 | C | 17 | C |
| 2 | B | 6 | C | 10 | C | 14 | B | 18 | B |
| 3 | C | 7 | D | 11 | D | 15 | D | 19 | A |
| 4 | D | 8 | A | 12 | A | 16 | B | 20 | C |

## (ஆ) கலிங்கத்துப்பரணி

1) போர் முனையில் யாரை கொன்று வெற்றி கொண்ட வீரரைப் பாடுவதை பரணி என்று கூறினர்?

A] மன்னர்கள்

B] குதிரைகள்

C] யானைகள்

D] போர்வீரர்கள்

2) பரணியின் இலக்கணம் கூறும் நூல் எது?

A] இலக்கண விளக்கச் சூறாவளி

B] இலக்கண விளக்கப் பாட்டியல்நூல்

C] தொல்காப்பிய நூல்

D] சிற்றிலக்கண இலக்கணம்

3) பரணி என்ற நாள்மீன் காளியையும் யமனையும் தன் தெய்வமாகப் பெற்றது என்றும் அந்நாள்மீனால் வந்த பெயரே நூலுக்கும் பெயராக வந்தது என்று கூறியவர் யார்?

A] திரு.வி.க

B] சுரதா

C] அப்துல் ரகுமான்

D] உ.வே.சாமிநாத அய்யர்

4) பரணி நூலானது கீழ்க்கண்ட யாருடைய பெயரால் வழங்கப்படுகிறது?

A] ஆசிரியர் பெயரால்

B] போரில் வெற்றி பெற்றவர் பெயரால்

C] போரில் தோற்றவர் பெயரால்

D] நூலை வெளியிட்டவர் பெயரால்

5) தமிழில் முதன் முதலில் எழுந்த பரணி நூல் எது?

A] கொப்பத்துப்பரணி

B] கலிங்கத்துப்பரணி

C] மோகவதைப்பரணி

D] தக்கையாகப்பரணி

6) கலிங்கத்துப்பரணியானது கீழ்க்கண்ட எத்தனை தாழிசைகளைக் கொண்டது?

A] 599 தாழிசைகள்

B] 509 தாழிசைகள்

C] 519 தாழிசைகள்

D] 559 தாழிசைகள்

7) கலிங்கத்துப்பரணியை 'தென்தமிழ் தெய்வப்பரணி' - என்று சிறப்பித்தவர் யார்?

A] அறிஞர் அண்ணா

B] ஒட்டக்கூத்தர்

C] உ.வே.சாமிநாதர்

D] பலபட்டை சொக்கநாதப் புலவர்

8) கலிங்கத்துப்பரணியை பாடியவர் யார்?

A] கபிலர்

B] பலபட்டைச் சொக்கநாதர்

C] ஒட்டக்கூத்தர்

D] செயங்கொண்டார்

9) செயங்கொண்டார் அவர்கள் கீழ்க்கண்ட எந்த மன்னனிடம் அவைக்களப் புலவராகத் திகழ்ந்தார்?

A] முதலாம் இராஜராஜ சோழன்

B] முதலாம் மகேந்திரவர்மன்

C] முதற் குலோத்துங்க சோழன்

D] முதலாம் பராந்தக சோழன்

10) செயங்கொண்டார் புலவரை 'பரணிக்கோர் செயங்கொண்டார்' - என புகழ்ந்து பாடியவர் யார்?

A] ஒட்டக்கூத்தர்

B] பலபட்டை சொக்கநாதப் புலவர்

C] ஔவையார்

D] மறோக்கத்து நப்பல்சையார்

11) கலிங்கத்துப்பரணி நூலில் கீழ்க்கண்ட எந்த பகுதியில் இருந்த பாடல்களானது நமது பாடப்பகுதியாக இடம்பெற்றுள்ளன?

A] காடு பாடியது

B] பேய்ப்பாடியது

C] இராச பாரம்பரியம்

D] காளிக்கு கூளி கூறியது

12) கலிங்க நாட்டிலிருந்து வந்த பேய் காளிதேவிக்குக் கூறிய போரின் வெம்மையான தன்மைகள் பலவும் கீழ்க்கண்ட எந்த பகுதியில் கூறப்படுகின்றன?

A] காளிக்கு கூளி கூறியது

B] களம் பாடியது

C] பேய்ப்பாடியது

D] போர்ப்பாடியது

13) இந்தியாவின் இன்றைய எந்த மாநிலமானது முற்காலத்தில் கலிங்கம் என அழைக்கப்பட்டது?

A] பாட்னா

B] வங்காளம்

C] ஒடிசா

D] ஹரியானா

14) கலிங்க நாட்டின் மீது போர் தொடுக்க முதற் குலோத்துங்க சோழன் கீழ்க்கண்ட யாரை அனுப்பினான்?

A] அனந்தவன்மன்

B] கருணாகரத் தொண்டைமான்

C] இளமாறன்

D] ஆரியதேவன்

15) அரைக்கலிங்கம் உரிப்புண்ட கலிங்கரெல்லாம் - என்ற வரியில் முதலில் வந்த கலிங்கம் என்ற சொல்லானது கீழ்க்கண்ட எந்த பொருளை குறித்தது?

A] கலிங்க வீரர்கள்

B] சோழ வீரர்கள்

C] மலை

D] ஆடை

16) வேடத்தால் குறையாது முந்நூல் ஆக - என்ற வரியில் அமைந்துள்ள முந்நூல் என்ற சொல்லானது கீழ்க்கண்ட எந்த பொருளை குறித்தது?

A] வேத நூல்கள்

B] முந்தைய நூல்கள்

C] முப்பரி நூலான பூணூல்

D] மூன்று பழமையான நூல்கள்

17) சயத்தம்பம் - என்ற சொல்லின் பொருள் யாது?

A] கொடித்தூண்

B] வெற்றித்தூண்

C] நினைவுத்தூண்

D] கற்பாறைத்தூண்

18) வயமா - என்பது கீழ்க்கண்ட எந்த விலங்கை குறிக்கிறது?

A] மதயானை

B] பேய்கள்

C] சிங்கம்

D] குதிரை

19) செயங்கொண்டார் அவர்கள் கீழ்க்கண்ட யாரை வண்டையர்கோன் என தன் கலிங்கத்துப்பரணி நூலில் குறிப்பிடுகிறார்?

A] முதலாம் குலோத்துங்க சோழன்

B] அனந்தவன்மன்

C] கருணாகரத் தொண்டைமான்

D] கலிங்க வீரர்கள்

20) கடற்கலிங்கம் - என்ற சொல்லின் இலக்கண குறிப்பு யாது?

A] இரண்டாம் வேற்றுமைத் தொகை

B] இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத்தொகை

C] வினையெச்சங்கள்

D] இடைக்குறை

விடைகள் - கலிங்கத்துப்பரணி

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | C | 5 | B | 9 | C | 13 | C | 17 | B |
| 2 | B | 6 | A | 10 | B | 14 | B | 18 | D |
| 3 | D | 7 | B | 11 | D | 15 | D | 19 | C |
| 4 | C | 8 | D | 12 | A | 16 | C | 20 | B |

## (இ) முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ்

1) கடவுளரையோ அரசரையோ பிறரையோ குழந்தையாகப் பாவித்து அவர்தம் குழந்தைப் பருவத்தைப் பத்துப் பருவங்களாகப் பகுத்துக் கொண்டு பருவத்து பத்து ஆசிரிய விருத்தங்கள் அமையப் பாடுவது____இலக்கியமாகும்?

A] தூது இலக்கியம்

B] பிள்ளைத்தமிழ் இலக்கியம்

C] உலா இலக்கியம்

D] அந்தாதி இலக்கியம்

2) முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ் நூலை இயற்றியவர் யார்?

A] குமரகுருபரர்

B] அழகிய சொக்கநாத புலவர்

C] தஞ்சை வேதநாயகம் பிள்ளை

D] வேதநாயக சாஸ்திரியார்

3) குமரகுருபரர் அவர்கள் கீழ்க்கண்ட எந்த ஊரில் பிறந்தார்?

A] திருமறைக்காடு

B] திருவெண்ணெய்நல்லூர்

C] திருவைகுண்டம்

D] திருநள்ளாறு

4) குமரகுருபரர் பிறந்த ஊரானது கீழ்க்கண்ட எந்த நதிக்கரையிலுள்ள ஊரில் பிறந்தார்?

A] கோதண்டராம ஆறு

B] வைகை

C] சிற்றாறு

D] தாமிரபரணி

5) குமரகுருபரர் அவர்கள் கீழ்க்கண்ட எந்த ஊரில் உள்ள முருகப் பெருமானின் அருளால் பேசும் திறமையைப் பெற்றார்?

A] திருப்பரங்குன்றம்

B] திருத்தணி

C] திருச்செந்தூர்

D] குன்றத்தூர்

6) குமரகுருபரர் இயற்றிய இலக்கியங்களில் கீழ்க்கண்டவற்றில் தவறான நூல் எது?

A] கந்தர் கலிவெண்பா

B] மதுரை கலிவெண்பா

C] மதுரைக் கலம்பகம்

D] நீதிநெறி விளக்கம்

7) விரல் சுவை யுண்டு கனிந்தமு தூறிய மெல்லிதழ் - எனத் தொடங்கும் முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் பாடலானது கீழ்க்கண்ட எந்த பருவத்தில் அமைந்துள்ளது?

A] சப்பாணி

B] காப்பு

C] செங்கீரை

D] வருகை

8) பொருள் தரியாத ஒலியைக் குழந்தை எழுப்பும் பருவத்தைக் குறிக்கும் பருவம் எது?

A] காப்பு

B] முத்தம்

C] செம்புலி

D] செங்கீரை

9) செங்கீரைப் பருவமானது பிள்ளைத்தமிழின் எத்தனையாவது பருவமாக அமைந்துள்ளது?

A] இரண்டாவது பருவம்

B] முதல் பருவம்

C] மூன்றாவது பருவம்

D] நான்காவது பருவம்

10) இளங்குழந்தை ங்க ங்க என்று கூறக் அதைக் கேட்டுத்தாய் உகக்கும் பருவம் எது?

A] சிற்றில்

B] அம்மானை

C] செங்கீரை

D] வருகை

11) தொட்டில் பிள்ளை தலையையுயர்த்திக் கையால் ஊன்றி உடம்பை அசைத்தல் பருவமானது பிள்ளைத்தமிழின் எத்தனையாவது பருவமாகும்?

A] செங்கீரை

B] நீராடல்

C] சிறுபறை

D] தாள்

12) அஞ்சனம் - என்ற சொல்லானது கீழ்க்கண்ட எந்த பொருளை குறிக்கிறது?

A] கண் புருவம்

B] கண்மை

C] நெற்றி

D] கைவிரல்

13) கண்மலர் - என்ற சொல்லின் இலக்கண குறிப்பு யாது?

A] உவமைத்தொகை

B] உரிச்சொற்றொடர்

C] உருவகத்தொடர்

D] வினைத்தொகை

14) குமரகுருபரர் அவர்கள் கீழ்க்கண்ட எந்த வயது வரை பேசும் திறனற்றவராக இருந்தார்?

A] இரண்டு வயது

B] மூன்று வயது

C] நான்கு வயது

D] ஐந்து வயது

விடைகள் - முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | B | 4 | D | 7 | C | 10 | C | 13 | C |
| 2 | A | 5 | C | 8 | D | 11 | A | 14 | D |
| 3 | C | 6 | B | 9 | A | 12 | B | | |

## (ஈ) பெத்தலகேம் குறவஞ்சி

1) பெத்தலேகேம் குறவஞ்சியில் உலா வரும் மன்னராக கீழ்க்கண்டவற்றில் யார் குறிப்பிடப்படுகிறார்?

A] இயேசு மன்னர்

B] சீயோன் மகள்

C] சிங்கன்

D] நூவன்

2) கீழ்க்கண்டவற்றில் யார் தேவமோகினியாக குறிப்பிடப்படுகிறார்?

A] இயேசு மன்னர்

B] சீயோன் மகள்

C] சிங்கன்

D] மக்கள்

3) கீழ்க்கண்டவற்றில் யார் உபதேசியாக குறிப்பிடப்படுகிறார்?

A] சீயோன் மகள்

B] மக்கள்

C] நூவன்

D] குறத்தி

4) பெத்தலகேம் குறவஞ்சி நூலில் பறவைகள் பிடிக்கும் வலைகளாக கீழ்க்கண்ட எது உருவகிக்கப்பட்டுள்ளன?

A] நூவன்

B] இயேசு

C] குறவன்

D] இறைவாக்கு

5) பெத்தலகேம் குறவஞ்சி நூலின் தனிச்சிறப்பு யாது?

A] அடையடுத்த கருவியாகுபெயர்

B] முற்றுருவகம்

C] கருவியாகுபெயர்

D] பெயரெடுத்த கருவியாகுபெயர்

6) பெத்தலகேம் குறவஞ்சி நூலை இயற்றியவர் யார்?

A] மாயூரம் வேதநாயகம் பிள்ளை

B] வீரமாமுனிவர்

C] தஞ்சை வேதநாயக சாஸ்திரியார்

D] மீனாட்சி சுந்தரம் பிள்ளை

7) வேதநாயக சாஸ்திரியார் அவர்களின் ஆசிரியர் பெயர் யாது?

A] சுவார்ட்ஸ் சாஸ்திரியார்

B] கவார்ட்ஸ் பாதிரியார்

C] சுவார்ட்ஸ் பிள்ளை

D] சுவார்ட்ஸ் பாதிரியார்

8) வேதநாயக சாஸ்திரியார் அவர்கள் கீழ்க்கண்ட எந்த அறிவுத்துறைகளில் கற்றத்துறைபோகிய அறிஞராக திகழவில்லை?

A] வானியல்

B] சமூகவியல்

C] பொருளியியல்

D] இறையியல்

9) வேதநாயக சாஸ்திரியார் அவர்கள் கீழ்க்கண்ட யாருக்கு உற்ற நண்பராக திகழ்ந்தார்?

A] தஞ்சையை ஆண்ட சரபோஜி மன்னர்

B] சிவகங்கையை ஆண்ட சரபோஜி மன்னர்

C] மதுரை ஆண்ட சரபோஜி மன்னர்

D] நெல்லை ஆண்ட சரபோஜி மன்னர்

10) கீழ்க்கண்ட எந்த வயதின் போது வேதநாயக சாஸ்திரியார் அவர்கள் பெத்தலகேம் குறவஞ்சியை இயற்றினார்?

A] 26 வது வயது

B] 25 வது வயது

C] 22 வது வயது

D] 24 வது வயது

11) குறவஞ்சி நூலானது கீழ்க்கண்ட எந்த குறவஞ்சி நூலுக்கு நிகராகப் இயற்றி அழியாப் புகழ் பெற்றது?

A] சரபேந்தர் குறவஞ்சி

B] ஞானக்குறவஞ்சி

C] குற்றாலக் குறவஞ்சி

D] மெய்ஞானக் குறவஞ்சி

12) வேதநாயக சாஸ்திரியார் அவர்கள் வாழ்ந்த காலம் யாது?

A] பதினாறாம் நூற்றாண்டு

B] பதினேழாம் நூற்றாண்டு

C] பன்னிரெண்டாம் நூற்றாண்டு

D] பதினெட்டாம் நூற்றாண்டு

13) கீழ்க்கண்டவற்றில் வேதநாயக சாஸ்திரியார் எழுதிய நூல்களில் தவறானது எது?

A] ஞானத்தச்சன்

B] ஞானவுலா

C] ஞானக்கீர்த்தனை

D] ஆரணாதிந்தம்

14) தற்பரன் - என்ற சொல்லின் பொருள் யாது?

A] இறைவன்

B] மக்கள்

C] கடல் அலைகள்

D] முல்லை நிலத்தலைவர்

15) பேய்க்கணங்கள் - என்பதன் இலக்கண குறிப்பு யாது?

A] இரண்டாம் வேற்றுமைத்தொகை

B] உவமைத்தொகை

C] ஆறாம் வேற்றுமைத்தொகை

D] நான்காம் வேற்றுமைத்தொகை

16) பலபட்டடைச் சொக்கநாத பிள்ளை எழுதிய மற்றொரு தூதுநூல் எது?

A] அன்னம் விடுதூது

B] தென்றல் விடுதூது

C] முகில் விடுதூது

D] தமிழ் விடுதூது

17) ஆண்பால் பிள்ளைத்தமிழுக்கும் பெண்பால் பிள்ளைத் தமிழுக்கும் பொதுவான பருவங்கள் எத்தனை?

A] 7

B] 6

C] 8

D] 5

விடைகள் - பெத்தலகேம் குறவஞ்சி

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | A | 2 | B | 3 | C | 4 | D | 5 | B |
| 6 | C | 7 | D | 8 | C | 9 | A | 10 | B |
| 11 | C | 12 | D | 13 | C | 14 | A | 15 | C |
| 16 | B | 17 | C | | | | | | |

## 6) மறுமலர்ச்சிப் பாடல்கள்

### (அ) எந்நாளோ?

1) 'பண்டைநலம் புதுப்புலமை பழம்பெருமை அத்தனையும் படைப்பாய் இந்நாள்! தொண்டு செய்வாய் தமிழுக்குத் துறைதோறுந் துறைதோறுந் துடித்தெழுந்தே' - என்று பாடியவர் யார்?

A] பாரதியார்

B] சிற்பி.பாலசுப்ரமணியம்

C] திரு.வி.கலியாணசுந்தரம்

D] பாரதிதாசன்

2) பழமையின் பெருமையை அடித்தளமாகவும் துறைதோறும் முகிழ்க்கும் புதிய களங்களைப் பாடுபொருளாகவும் கொண்டு எழுந்த பாடல்கள்_____எனப்படும்?

A] தொடர்நிலைச் செய்யுள் இலக்கியம்

B] மறுமலர்ச்சி இலக்கியம்

C] பேரிலக்கியங்கள்

D] சிற்றிலக்கியங்கள்

3) மறுமலர்ச்சி இலக்கியத்தின் வேறு பெயர்களில் கீழ்க்கண்டவற்றில் தவறானது எது?

A] சுவைபுதிது

B] பொருள்புதிது

C] புதுகவிதை

D] நவகவிதை

4) கீழ்க்கண்டவற்றில் எந்த இலக்கியமானது மானிடத்தின் விழுப்பொருள்களையும் அவலங்களையும் புதிய நோக்குடனும், புத்தம் புதிய கலைகளைத் திசைதோறும் தேர்ந்து செந்தமிழ்ச் சேர்க்கிறது?

A] பேரிலக்கியம்

B] சிற்றலிக்கியம்

C] பக்தி இலக்கியம்

D] மறுமலர்ச்சி இலக்கியம்

5) பாரதிதாசன் அவர்கள் இளமையிலேயே கீழ்க்கண்ட எந்த இருமொழிகளில் சிறந்த புலமை பெற்றிருந்தார்?

A] தமிழ், ஆங்கிலம்

B] பிரெஞ்சு, தமிழ்

C] தமிழ், வடமொழி

D] உருது, பிரெஞ்சு

6) தமிழ்நாட்டின் இரசூல்கம்சதேவ் என்று பாராட்டப்பெற்றவர் யார்?

A] பாரதிதாசன்

B] சுரதா

C] வாணிதாசன்

D] வல்லிக்கண்ணன்

7) இரசூல்கம்சதேவ் என்பவர் கீழ்க்கண்ட எந்நாட்டின் மாக்கவிஞர் ஆவார்?

A] இங்கிலாந்து

B] அமெரிக்கா

C] உருசிய

D] செர்பியா

8) ‘உயிரை உணர்வை வளர்ப்பது தமிழேம்’ என்றும் ‘இன்பத் தமிழ்க் கல்வி யாவரும் கற்றவர் என்றுரைக்கும் நிலை எய்தி விட்டால் துன்பங்கள் நீங்கும் சுகம் வரும் நெஞ்சினில் தூய்மை உண்டாகிடும் வீரம் வரும்’ - என்று எழுதியவர் யார்?

A] மீனாட்சி சுந்தரனார்

B] திரு.வி.க

C] கவிமணி

D] பாரதிதாசன்

9) பாரதிதாசன் இயற்றிய காப்பியங்களில் கீழ்க்கண்டவற்றில் தவறானது எது?

A] குடும்ப விளக்கு

B] பாண்டியன் பரிசு

C] குறிஞ்சிக்குறள்

D] பிசிராந்தையார்

10) பாரதிதாசனின் எந்த நூலானது சாகித்ய அகாடமி விருது பெற்றது?

A] அழகின் சிரிப்பு

B] பிசிராந்தையார்

C] சேர தாண்டவம்

D] தமிழச்சியின் கத்தி

11) கீழ்க்கண்ட எந்த ஆண்டின் போது பாரதிதாசன் எழுதிய நூலுக்கு சாகித்ய அகாடமி விருது வழங்கப்பட்டது?

A] 1969

B] 1967

C] 1965

D] 1970

12) பாரதிதாசன் அவர்கள் கீழ்க்கண்ட எந்த வரியில் தொடங்கும் பாடலை புதுவை அரசானது தனது தமிழ்த்தாய் வாழ்த்தாக ஏற்றுக்கொண்டது?

A] தமிழுக்கு அமுதென்று பெயர்

B] புதியதோர் உலகம் செய்வோம்

C] எங்கெங்கு காணினும் சக்தியடா

D] வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே

13) பாரதிதாசன் அவர்கள் கீழ்க்கண்ட எந்த இதழை நடத்தி வந்தார்?

A] நவசக்தி

B] குயில்

C] தென்றல்

D] குரல்

14) பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் பிறப்பு - இறப்பு ஆண்டுகள் யாது?

A] 1891 - 1964

B] 1890 - 1963

C] 1892 - 1961

D] 1893 - 1964

15) புத்தகசாலையில் இருக்க வேண்டி பாரதிதாசன் கூறிய நூல்களில் தவறானது எது?

A] கணிதம்

B] வான் நூல்கள்

C] சித்தாந்த நூல்கள்

D] மெய்த்திற நூல்கள்

16) தமிழரின் கவிதைகள் கீழ்க்கண்ட எத்தனை மொழிகளில் மொழிக்கப்பட்டு அனைவரும் படிப்பதை என் செவியால் தேனூற கேட்கும் நாள் எதுவென்று பாரதிதாசன் கூறுகிறார்?

A] 500 மொழிகள்

B] 300 மொழிகள்

C] 800 மொழிகள்

D] 1000 மொழிகள்

17) பகர்வார் - என்பதன் இலக்கண குறிப்பு யாது?

A] வினையாலனையும் பெயர்

B] இரண்டாம் வேற்றுமைத்தொகை

C] அன்மொழித்தொகை

D] உவமைத்தொகை

A] பாரதியார்

B] பாரதிதாசன்

C] சுரதா

D] கவிமணி

18) என்னருந் தமிழ்நாட் டின்கண் எல்லோரும் கல்வி கற்றுப் - எனத் தொடங்கும் பாடலை பாடிய புலவர் யார்?

விடைகள் - எந்நாளோ?

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | D | 5 | B | 9 | C | 13 | B | 17 | A |
| 2 | B | 6 | A | 10 | B | 14 | A | 18 | B |
| 3 | C | 7 | C | 11 | A | 15 | C | | |
| 4 | D | 8 | D | 12 | D | 16 | D | | |

## (ஆ) பூக்கட்டும் புதுமை

1) பாரதிதாசன் பரம்பரையில் மூத்ததலைமுறைக் கவிஞர் யார்?

A] வல்லிக்கண்ணன்

B] நா.காமராசன்

C] முடியரசன்

D] வாணிதாசன்

2) முடியரசனின் இயற்பெயர் யாது?

A] துரைமாணிக்கம்

B] துரைராசு

C] துரைரத்தினம்

D] ராசுத்துரை

3) முடியரசன் பிறந்த ஊர் யாது?

A] சிறியகுளம்

B] இரட்டணை

C] பெரியகுளம்

D] அரியலூர்

4) தந்தை பெரியாரிடத்திலும், அறிஞர் அண்ணா இடத்திலும் நெருங்கிப் பழகிய புலவர் யார்?

A] அன்பழகன்

B] சுப்புரத்தினதாசன்

C] இராசகோபால்

D] துரைராசு

5) பாரதிதாசனோடு மிக நெருங்கி பழகி அவருடைய முற்போக்கு எண்ணங்களை ஏற்றுப் பாடியவர் யார்?

A] முடியரசன்

B] கண்ணதாசன்

C] பாவலர் பெருஞ்சித்திரனார்

D] கவிஞர் சுரதா

6) கீழ்க்கண்டவற்றில் யார் சடங்குகளை மறுத்து சாதி மறுப்புத் திருமணஞ் செய்து கொண்டவர்?

A] இராமலிங்க தேவர்

B] திரு.வி.க

C] முடியரசன்

D] மு.வரதராசனார்

7) தமது மறைவின் போது எச்சடங்கும் வேண்டாம் என்று கூறி அவ்வாறே செய்த புலவர் யார்?

A] பாரதிதாசன்

B] முடியரசன்

C] இலக்குவனார்

D] தந்தை பெரியார்

8) முடியரசன் அவர்கள் கீழ்க்கண்ட எப்பள்ளியில் தமிழாசிரியராக பணிபுரிந்தார்?

A] மதுரை மீ.சு.உயர்நிலைப் பள்ளி

B] திருச்சி மீ.சு.உயர்நிலைப் பள்ளி

C] பெரியகுளம் மீ.சு.உயர்நிலைப்பள்ளி

D] காரைக்குடி மீ.சு.உயர்நிலைப்பள்ளி

9) முடியரசன் இயற்றிய நூல்களில் கீழ்க்கண்டவற்றில் தவறானது எது?

A] பூங்கொடி

B] காவியப்பாவை

C] பூக்கொடி

D] வீரகாவியம்

10) முடியரசனின் கவிதைகளைச் கீழ்க்கண்ட எந்த நிறுவனம் இந்தியிலும் ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளது?

A] தமிழக அரசு பதிப்புத்துறை

B] சாகித்திய அகாதெமி

C] யுனெஸ்கோ நிறுவனம்

D] தில்லி உயர்நிலை தமிழ் நிறுவனம்

11) எந்த ஆண்டு பூங்கொடி நூலானது தமிழக அரசின் விருதைப் பெற்றது?

A] 1955

B] 1963

C] 1962

D] 1966

12) முடியரசனுக்கு கீழ்க்கண்ட யாரல் கவியரசு என்ற பட்டம் அளிக்கப்பட்டது?

A] குன்னக்குடி அடிகளார்

B] பாரதிதாசன்

C] குன்றக்குடி அடிகளார்

D] மு.வரதராசனார்

13) முடியரசனுக்கு கீழ்க்கண்ட எந்த மலையில் நடந்த விழாவில் கவியரசு பட்டம் வழங்கப்பட்டது?

A] மேரு மலை

B] பறம்பு மலை

C] விராலி மலை

D] குன்றத்தூர் மலை

14) பூக்கின்றமலர்களெல்லாம் பூக்கள் அல்ல - என்ற பாடலை பாடிய புலவர் யார்?

A] முடியரசன்

B] பாரதிதாசன்

C] சுரதா

D] அப்துல் ரகுமான்

15) அறிவை மயக்கும் வகையில் தற்போது உருவாகி வரும் புதுமையானது கீழ்க்கண்ட எதனுடன் உவமைப்படுத்தி புலவர் கூறுகிறார்?

A] மலர்கள்

B] சூரியக்கதிர்

C] காகிதப்பூ

D] பனித்துளி

16) செங்கதிரால் கீழ்க்கண்டவற்றில் எது சிரிக்கும் என்று முடியரசன் தன் கவிதையில் கூறுகிறார்?

A] அல்லி மலர்

B] பயிர்கள்

C] அறிவு

D] தாமரைகள்

17) சேர்கள் நிறைந்திருக்கும் இடத்தில் கீழ்க்கண்ட எவை சிரிக்கும் என்று முடியரசன் கூறுகிறார்?

A] அல்லி மலர்

B] பயிர்கள்

C] அறிவு

D] தாமரைகள்

18) பொய்யாத மொழிக்குறளால் கீழ்க்கண்ட எது சிரிக்கும் என்று முடியரசன் தன் கவிதைகளில் கூறுகிறார்?

A] அல்லி மலர்

B] பயிர்கள்

C] அறிவு

D] தாமரைகள்

19) காகிதப்பூ - என்ற சொல்லின் இலக்கண குறிப்பு யாது?

A] மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

B] இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கை தொகை

C] நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

D] இரண்டாம் வேற்றுமைத் தொகை

## விடைகள் - பூக்கட்டும் புதுமை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | C | 5 | A | 9 | C | 13 | B | 17 | A |
| 2 | B | 6 | C | 10 | B | 14 | A | 18 | C |
| 3 | C | 7 | B | 11 | D | 15 | C | 19 | A |
| 4 | D | 8 | D | 12 | C | 16 | D | | |

## (இ) விடுதலை விளைத்த உரிமை

1) கவிஞர் கண்ணதாசன் அவர்கள் கீழ்க்கண்ட எந்த நாளை விடுதலை நாளாக தம் கவிதை வரியில் கூறகிறார்?

A] வறுமையும் அச்சமும் நீங்கும் நாள்

B] அடிமைகள் ஒழிகின்ற நாள்

C] ஆதிக்க வெறியர்கள் ஒழிகின்ற நாள்

D] சாதி, மதம் ஒழியும் நாள்

2) விடுதலை விளைத்த உரிமை - என்ற தலைப்பில் எப்படிப்பட்ட இந்தியநிலை அமைய வேண்டும் என்று கவிதை ஒன்றை எழுதியவர் யார்?

A] வாணிதாசன்

B] கண்ணதாசன்

C] பாரதிதாசன்

D] வல்லிக்கண்ணன்

3) கண்ணதாசன் கூறிய சிறைவைக்கும் பொருள்களில் கீழ்க்கண்டவற்றில் தவறானது எது?

A] காலம்

B] உலகம்

C] கடவுள்

D] புத்தகம்

4) மாற்றம் எனது மானிடத் தத்துவம் - என்று பாடிய கவியரசர் யார்?

A] பட்டுக்கோட்டையார்

B] உடுமலை நாராயணகவி

C] கண்ணதாசன்

D] பரிதிமாற்கலைஞர்

5) கண்ணதாசன் பிறந்த ஊர் யாது?

A] பெரியகுளம்

B] சிறுநுதல்பட்டி

C] சென்னிக்குளம்

D] சிறுகூடற்பட்டி

6) பழந்தமிழ் இலக்கியத்தின் உயிர்ச்சாரத்தையெல்லாம் தமது பாடல்களிலே தந்த புலவர் யார்?

A] கண்ணதாசன்

B] பட்டுக்கோட்டையார்

C] உடுமலை நாராயணகவி

D] மருதகாசி

7) கண்ணதாசன் அவர்கள் பிறந்த ஆண்டு எது?

A] 1925

B] 1926

C] 1927

D] 1928

8) கண்ணதாசன் அவர்களின் இயற்பெயர் யாது?

A] கண்ணையா

B] துரைமாணிக்கம்

C] பொன்னையன்

D] முத்தையா

9) கண்ணதாசன் அவர்கள் கீழ்க்கண்ட எந்த இதழில் ஆசிரியராக விளங்கவில்லை?

A] கண்ணதாசன்

B] சண்டமாருதம்

C] இசைத்தமிழ்

D] தென்றல்திரை

10) கண்ணதாசன் அவர்கள் இறந்த ஆண்டு எது?

A] 1980

B] 1981

C] 1982

D] 1983

11) கண்ணதாசனின் கவிதைகளானது கண்ணதாசன் கவிதைகள் என்ற பெயரில் மொத்தம் எத்தனை தொகுப்புகளாக வெளிவந்தது?

A] 6 தொகுப்புகள்

B] 5 தொகுப்புகள்

C] 4 தொகுப்புகள்

D] 3 தொகுப்புகள்

12) மிடிமை - என்ற சொல்லின் பொருள் யாது?

A] செல்வம்

B] வறுமை

C] பெருமை

D] கொடுமை

13) கண்ணதாசனின் கீழ்க்கண்ட எந்த நூலானது சாகித்திய அகாதெமி விருது பெற்றுள்ளது?

A] இராஜ தண்டனை

B] ஞானாம்பிகா

C] சேரமான் காதலி

D] அர்த்தமுள்ள இந்து மதம்

14) கீழ்க்கண்ட எந்த ஆண்டின் போது கண்ணதாசன் நூலுக்கு சாகித்திய அகாதெமி விருது அளிக்கப்பட்டது?

A] 1980

B] 1981

C] 1982

D] 1983

15) கீழ்க்கண்ட எந்த ஆண்டின் போது கண்ணதாசன் அவர்கள் தமிழகத்தின் ஆஸ்தான (அரசவை) கவிஞராக பதவியேற்றார்?

A] 1972

B] 1973

C] 1975

D] 1978

16) கண்ணதாசன் அவர்களின் கீழ்க்கண்ட எந்த நூலானது அவருக்கு புகழை என்றும் நிலைநிறுத்துகிறது?

A] இயேசு காவியம்

B] அர்த்தமுள்ள இந்துமதம்

C] மாங்கனி

D] வனவாசம்

17) கண்ணதாசன் எழுதிய முதல் குறுங்காவியம் எது?

A] ஆட்டனத்தி ஆதிமந்தி

B] மாங்கனி

C] பாண்டிமாதேவி

D] பஜகோவிந்தம்

18) கீழ்க்கண்ட எந்த திரைப்படத்திற்கு கண்ணதாசன் அவர்கள் சிறந்த வசனத்திற்கான தேசிய விருதை பெற்றார்?

A] கண்ணாயிரம்

B] பாவமன்னிப்பு

C] குழந்தைக்காக

D] மூன்றாம்பிறை

19) கம்பரின் செய்யுள்களிலும், பாரதியாரின் பாடல்களிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த புலவர் யார்?

A] பாரதிதாசன்

B] முடியரசன்

C] சுரதா

D] கண்ணதாசன்

20) கண்ணதாசன் அவர்கள் கீழ்க்கண்ட யாரை தன் மானசீக குருவாக ஏற்றார்?

A] பாரதியார்

B] பாரதிதாசன்

C] திரு.வி.க

D] அறிஞர் அண்ணா

21) கண்ணதாசன் அவர்கள் தான் எழுதிய சுயசரிதை நூல்களில் கீழ்க்கண்டவற்றில் தவறானது எது?

A] எனது சுயசரிதம்

B] வனவாசம்

C] மனவாசம்

D] போய் வருகிறேன்

22) கண்ணதாசன் அவர்கள் சமயத்தை பற்றி எழுதிய அர்த்தமுள்ள இந்துமத நூலானது எத்தனை பாகங்களை கொண்டது?

A] 8 பாகங்கள்

B] 10 பாகங்கள்

C] 12 பாகங்கள்

D] 6 பாகங்கள்

23) கண்ணதாசன் எழுதிய நாடக நூல்களில் தவறானது எது?

A] இராஜ தண்டனை

B] அனார்களி

C] அருனோதயம்

D] சிவங்கை சீமை

24) 'காட்டுக்கு இராஜா சிங்கம், கவிதைக்கு இராஜா கண்ணதாசமன்' - என்று கண்ணதாசனை புகழ்ந்தவர் யார்?

A] அறிஞர் அண்ணா

B] தந்தை பெரியார்

C] கலைஞர் கருணாநிதி

D] காமராசர்

25) 'கவிஞரின் தோரணையை விட அரசனின் தோரணை தான் கவிஞரிடம் இருக்கும்' - என்று கண்ணதாசனை பற்றிக் கூறியவர் யார்?

A] ஜெயகாந்தன்

B] ஜெகச்சிற்பியன்

C] காமராசர்

D] முடியரசன்

26) வதிபவர் - என்ற சொல்லின் இலக்கண குறிப்பு யாது?

A] பெயரெச்சம்

B] வினைத்தொகை

C] வினையாலணையும் பெயர்

D] வியங்கோள் வினைமுற்று

27) கண்ணதாசன் எழுதிய கவிதை நூல்களில் கீழ்க்கண்டவற்றில் தவறானது எது?

A] கவிதாஞ்சலி

B] ஞானம்பாலிகா

C] தாய்ப்பாவை

D] கிருஷ்ண கானம்

28) கண்ணதாசன் அவர்களை தமிழக அரசவைக் கவிஞராக நியமித்த தமிழக முதல்வர் யார்?

A] காமராசர்

B] கலைஞர் கருணாநிதி

C] இராஜாஜி

D] எம்.ஜி.இராமச்சந்திரன்

## விடைகள் - விடுதலை விளைத்த உரிமை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | A | 7 | C | 13 | C | 19 | D | 25 | A |
| 2 | B | 8 | D | 14 | A | 20 | A | 26 | C |
| 3 | D | 9 | C | 15 | D | 21 | D | 27 | B |
| 4 | C | 10 | B | 16 | A | 22 | B | 28 | D |
| 5 | D | 11 | A | 17 | B | 23 | C | | |
| 6 | A | 12 | B | 18 | C | 24 | D | | |

### (ஈ) தளை

1) நம்மை எதுதான் தளைப்படுத்துகிறது? சாதியா? மதமா? மொழியா? நாடா? - என்று இந்நாட்டின் அவலங்களை தன் கவிதைகளை தளை என்னும் தலைப்பில் எழுதிய கவிஞர் யார்?

A] சிற்பி பாலசுப்பிரமணியம்

B] நாமக்கல் கவிஞர்

C] மறைமலையடிகள்

D] தருமு சிவராமு

2) சிற்பி அவர்கள் தம் தளை என்னும் கவிதை பாடலில் காளையின் முன்னால் கீழ்க்கண்டவற்றில் எவை தெரிவதாக கூறுகிறார்?

A] நெல்வயல்

B] சோளக்கொல்லை

C] தடித்த புல்

D] பிண்ணாக்குத் தண்ணீர்

3) காளையின் பக்கத்தில் கீழ்க்கண்டவற்றில் எது இருப்பதாக கவிஞர் பாடுகிறார்?

A] பிண்ணாக்குத் தண்ணீர்

B] தடித்த புல்

C] நெல்வயல்

D] சோளக்கொல்லை

4) தோட்டத்து வேலிக்குள் கீழ்க்கண்டவற்றில் எது இருப்பதாக காளை மூலம் கவிஞர் தம் கவிதையில் கூறுகிறார்?

A] முத்துக்கொண்டை சோளக்கொல்லை

B] சுவைக்க பிண்ணாக்குத் தண்ணீர்

C] பழுத்த நெல்வயல்

D] கொழுக்கட்டைப் புல்

5) சிற்பி பாலசுப்ரமணியம் அவர்கள் கீழ்க்கண்ட எந்த ஊரில் பிறந்தார்?

A] பொள்ளாச்சி

B] தென்காசி

C] பெரியகுளம்

D] இராமநாதபுரம்

6) சிற்பி பிறந்த ஊரானது கீழ்க்கண்ட எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது?

A] திருச்சி

B] கோவை

C] மதுரை

D] விருதுநகர்

7) கருத்தோவியங்களை வடிவமைக்கும் சொல்லேருழவர் - என்று சிறப்பிக்கப்படுபவர் யார்?

A] ந.பிச்சமூர்த்தி

B] வல்லிக்கண்ணன்

C] சிற்பி பாலசுப்ரமணியம்

D] கவிமணி

8) சொல்லைத் தேர்ந்து செதுக்கித் தமிழ்ப்பாடல் ஆக்கும் சிற்பி - என்று பாரட்டப்படுபவர் யார்?

A] உடுமலை நாராயணகவி

B] மருதகாசி

C] கண்ணதாசன்

D] சிற்பி பாலசுப்ரமணியம்

9) சிற்பி அவர்கள் கீழ்க்கண்ட எந்த பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறை தலைவராக பணியாற்றினார்?

A] பாரதியார் பல்கலைக்கழகம்

B] காமராசர் பல்கலைக்கழகம்

C] பாரதிதாசன் பல்கலைக்கழகம்

D] அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

10) சிற்பி பாலசுப்ரமணியம் அவர்கள் எழுதிய கவிதை நூல்களில் தவறானது எது?

A] சிரித்த முத்துக்கள்

B] இலக்கியச் சிந்தனை

C] ஒளிப்பறவை

D] சர்ப்பயாகம்

11) சிற்பி பாலசுப்ரமணியம் எழுதிய உரைநடை நூல்களில் தவறானது எது?

A] மலையாளக் கவிதை

B] அலையும் சுவடும்

C] நிலவுப்பூ

D] ஒரு கிராமத்து நதிக்கரையில்

12) சிற்பி எழுதிய கீழ்க்கண்ட எந்த நூலானது சாகித்திய அகாதெமி விருது பெற்றது?

A] சிரித்த முத்துக்கம்

B] ஒளிப்பறவை

C] அலையும் சுவடும்

D] ஒரு கிராமத்து நதிக்கரை

13) கீழ்க்கண்ட எந்த ஆண்டின் போது சிற்பி எழுதிய நூலுக்கு சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டது?

A] 2002

B] 2001

C] 1996

D] 1998

14) கீழ்க்கண்ட எந்த ஆண்டின் போது சிற்பி பாலசுப்ரமணியன் அவர்களுக்கு தமிழக அரசின் பாவேந்தர் பரிசு வழங்கப்பட்டது?

A] 1990

B] 1991

C] 1992

D] 1993

15) தளை - என்ற தலைப்பின் கவிதையை சிற்பி பாலசுப்ரமணியம் அவர்கள் கீழ்க்கண்ட எந்த நூலில் எழுதி உள்ளார்?

A] சர்ப்பயாகம்

B] சிரித்த முத்துக்கள்

C] ஒளிப்பறவை

D] சூரிய நிழல்

விடைகள் - தளை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | A | 4 | D | 7 | C | 10 | B | 13 | A |
| 2 | B | 5 | A | 8 | D | 11 | C | 14 | B |
| 3 | C | 6 | B | 9 | A | 12 | D | 15 | C |

## (உ) கண்கள்

1) கண் - என்ற தலைப்பில் கவிதை எழுதிய புலவர் யார்?

A] ந.பிச்சமூர்த்தி

B] நா.காமராசன்

C] வல்லிக்கண்ணன்

D] அப்துல் ரகுமான்

2) இந்த உலகில் பகல் பூக்களாக இருப்பவை எதுவென்று கவிஞர் தன் கவிதையில் கூறுகிறார்?

A] கண்கள்

B] கண்இமை

C] கண்புருவம்

D] கண்கருவிழி

3) கொட்டாவி நாட்டியத்தின் நட்டுவனார் - என்று கீழ்க்கண்ட எவற்றை நா.காமராசன் அவர்கள் கூறுகிறார்?

A] கண்புருவம்

B] கண்கள்

C] கண்இமை

D] கண் கருவிழி

4) கீழ்க்கண்ட எவற்றை நா.காமராசன் அவர்கள் ஊமை வண்டுகள் என்று கூறுகிறார்?

A] புதையல்

B] தேன்

C] கருவண்டுகள்

D] கண்கள்

5) பூக்களானது தாயின் கருப்பையாகிய சோலையில் கீழ்க்கண்ட எத்தனையாவது மாதமாகிய வசந்த காலத்தில் மொட்டாகி மலர்கிறது?

A] மூன்றாவது மாதம்

B] ஐந்தாவது மாதம்

C] நான்காவது மாதம்

D] ஆறாவது மாதம்

6) ஆன்மாவின் மொழியை பேசுபவையாக கீழ்க்கண்டவற்றில் எவை இருப்பதாக கவிஞர் குறிப்பிடுகிறார்?

A] மௌனம்

B] பூ பூக்கும் மொட்டுகள்

C] கண்ணீர்துளிகள்

D] சிரிப்பலை

7) குருட்டுக்கு பொட்டுவைத்த கோல ஒப்பனைகள் - என்று கவிஞர் யாரை குறிப்பிடுகிறார்?

A] பார்வையற்றவரின் விழிகள்

B] பார்வையுள்ளவர்களின் விழிகள்

C] அறிவுடையார்களின் விழிகள்

D] அறிவற்றவர்களின் விழிகள்

8) மனநாட்டின் தூதுவர்கள் - என்று நா.காமராசன் கீழ்க்கண்ட எவற்றை குறிப்பிடுகிறார்?

A] பூக்கள்

B] பிரபஞ்சம்

C] மனம்

D] கண்கள்

9) இந்த உலகத்தின் மூச்சுக்காற்றின்றி அணையும் விளக்கு எதுவென்று நா.காமராசன் அவர்கள் தன் படிமக் கவிதையால் குறிப்பிடுகிறார்?

A] வாய்

B] கண்

C] இதயம்

D] கைவிளக்கு

10) நா.காமராசன் அவர்கள் பிறந்த ஆண்டு எது?

A] 1943

B] 1941

C] 1942

D] 1944

11) நா.காமராசன் அவர்கள் பிறந்த ஊர் எது?

A] போடிக்கநாயனூர்

B] போடி-காமாட்சிபுரம்

C] திருவானைக்கா

D] போடி-மீனாட்சிபுரம்

12) கிராமிய சந்தங்களுடன் புதுப்பார்வை திகழ படிமக் கவிதைகள் பலவற்றை எழுதியவர் யார்?

A] நா.காமராசன்

B] வாணிதாசன்

C] சிற்பி பாலசுப்ரமணியம்

D] திரு.வி.க

13) நா.காமராசனின் எந்த நூலானது கவிதை உலகில் ஒரு திருப்பத்தை உருவாக்கியதென அறிஞர்கள் புகழ்ந்தனர்?

A] சூரியகாந்தி

B] கறுப்பு மலர்கள்

C] சகாரவை தாண்டாத ஒட்டகங்கள்

D] தாஜ்மகாலும் ரொட்டித்துண்டும்

14) கறுப்பு மலர்கள் - என்ற நூலானது கீழ்க்கண்ட எந்த ஆண்டின் போது வெளிவந்தது?

A] 1970

B] 1973

C] 1971

D] 1974

15) உருவகம் என்ற வழக்கு புதுக்கவிதைகளிலே_____என்று வழங்கப்படும்?

A] உவமை

B] உலகம்

C] கற்பனை

D] படிமம்

16) புதுக் கவிதைகளுக்கு உயிர்ப்பும் வாழ்வும் வழங்குவது எது?

A] படிமங்கள்

B] கவிதைகள்

C] சொற்கள்

D] காட்சிகள்

17) சொல்லுக்குள் ஆழ்ந்து கிடக்கும் இருண்மையும் துலக்கமும் கீழ்க்கண்டவற்றில் எதன் வாயிலாத் தோன்றி தோன்றி மறையும்?

A] கவிதைகள்

B] படிமங்கள்

C] சொற்கள்

D] காட்சிகள்

18) கவித்துவக் காட்சிகளை விவரிக்கும் சொல்லாட்சிகளே_____எனப்படும்?

A] இலக்கியங்கள்

B] காட்சிகள்

C] படிமங்கள்

D] ஓவியங்கள்

19) பகல்பூக்கள் - என்ற சொல்லின் இலக்கண குறிப்பு யாது?

A] இரண்டாம் வேற்றுமைத்தொகை

B] மூன்றாம் வேற்றுமைத்தொகை

C] ஆறாம் வேற்றுமைத்தொகை

D] ஏழாம் வேற்றுமைத்தொகை

20) மனப்பறவை, புருவக்கொடி - ஆகிய சொற்களின் இலக்கண குறிப்பு யாது?

A] உவமைகள்

B] உருவகங்கள்

C] மரபுத்தொடர்கள்

D] இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

விடைகள் - கண்கள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | B | 5 | B | 9 | B | 13 | B | 17 | B |
| 2 | A | 6 | C | 10 | C | 14 | C | 18 | C |
| 3 | C | 7 | A | 11 | D | 15 | D | 19 | D |
| 4 | D | 8 | D | 12 | A | 16 | A | 20 | B |

## (ஊ) தண்ணீர் வங்கிகள்

1) தண்ணீர் வங்கிகள் - என்ற தலைப்பில் நீரின் அருமையை கவிதையாக கூறிய புலவர் யார்?

A] ந.கருணாநிதி

B] ந.பிச்சமூர்த்தி

C] வல்லிக்கண்ணன்

D] பாரதிதாசன்

2) ந.கருணாநிதி அவர்கள் கீழ்க்கண்ட எந்த இடத்தில் பிறந்தார்?

A] கள்ளக்குறிச்சி

B] சிதம்பரம்

C] திருக்கோவிலூர்

D] திருநள்ளாறு

3) அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் புலவர்பட்டத் தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர் யார்?

A] ந.பிச்சமூர்த்தி

B] ஈரோடு தமிழன்பன்

C] ந.கருணாநிதி

D] சி.சு.செல்லப்பா

4) ந.கருணாநிதி அவர்கள் கீழ்க்கண்ட எந்த நூலின் முழுமைக்கும் உரை எழுதியுள்ளார்?

A] திருக்குறள்

B] சிலப்பதிகாரம்

C] மணிமேகலை

D] தொல்காப்பியம்

5) ந.கருணாநிதி அவர்கள் கீழ்க்கண்ட எந்த நூலில் தண்ணீர் வங்கிகள் என்ற கவிதையை எழுதியுள்ளார்?

A] நட்புக்குள் மலரட்டும் நல்லிணக்கம்

B] மக்களுக்குள் மலரட்டும் நல்லிணக்கம்

C] நமக்குள் மலரட்டும் நல்லிணக்கம்

D] மனதுக்குள் மலரட்டும் நல்லிணக்கம்

6) ந.கருணாநிதி அவர்கள் கீழ்க்கண்ட எந்த ஆண்டின் போது பிறந்தார்?

A] 1937

B] 1939

C] 1936

D] 1938

7) வான்மழை - என்ற சொல்லின் இலக்கண குறிப்பு யாது?

A] ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கதொகை

B] நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கதொகை

C] மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கதொகை

D] ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கதொகை

விடைகள் - தண்ணீர் வங்கிகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | A | 2 | B | 3 | C | 4 | D | 5 | C |
| 6 | B | 7 | A | | | | | | |

## 7) வழிபாட்டுப் பாடல்கள்

### (அ) சிவபெருமான்

1) நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம் - என்ற வரித்தொடங்கும் பாடலை பாடியவர் யார்?

A] திருஞானசம்பந்தர்

B] திருநாவுக்கரசர்

C] மாணிக்கவாசகர்

D] சுந்தரர்

2) திருநாவுக்கரசர் பிறந்த ஊர் யாது?

A] திருவாமூர்

B] திருவாதவூர்

C] திருபெருந்துறை

D] திருநாவலூர்

3) நாவுக்கரசர் அவர்களுக்கு பெற்றோர் இட்ட பெயர் யாது?

A] வாகீசர்

B] அப்பர்

C] மருள்நீக்கியார்

D] தாண்டகவேந்தர்

4) 'என் கடன் பணி செய்து கிடப்பதே' - என்னும் திருவாக்கை அளித்தவர் யார்?

A] சேக்கிழார்

B] சம்பந்தர்

C] சுந்தரர்

D] அப்பர்

5) நாவுக்கரசர் அவர்கள் வாழ்ந்த காலம் எதுவென்று கூறப்படுகிறது?

A] கி.பி.ஐந்தாம் நூற்றாண்டு

B] கி.பி.ஏழாம் நூற்றாண்டு

C] கி.பி.ஆறாம் நூற்றாண்டு

D] கி.பி.எட்டாம் நூற்றாண்டு

6) 'நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்' - எனத் தொடங்கும் பாடலானது கீழ்க்கண்ட எந்த மன்னனை எதிர்த்து திருநாவுக்கரசர் பாடினார்?

A] பாண்டிய மன்னன்

B] சேர மன்னன்

C] பல்லவ மன்னன்

D] சோழ மன்னன்

7) 'நாமார்க்கும் குடியல்லோம்' - எனத் தொடங்கும் பாடலானது கீழ்க்கண்ட எந்த திருமுறையில் அமைந்துள்ளது?

A] ஆறாம் திருமுறை

B] ஐந்தாம் திருமுறை

C] நான்காம் திருமுறை

D] ஏழாம் திருமுறை

8) நாவுக்கரசர் பாடிய 'நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்' - என்ற வரிப்பாடலை கீழ்க்கண்ட எந்த தாண்டகத்தில் பாடியுள்ளார்?

A] நின்ற திருத்தாண்டகம்

B] தனித் திருத்தாண்டகம்

C] மறுமாற்றத் திருத்தாண்டகம்

D] திருவினாத் திருத்தாண்டகம்

9) நாவுக்கரசர் அவர்கள் சமண சமயத்தில் இணைந்த பிறகு கீழ்க்கண்ட எந்த பெயரில் அழைக்கப்பட்டார்?

A] அப்பர்

B] தாண்டகவேந்தர்

C] வாகீசிர்

D] தேவசேனன்

10) கொய்மலர் - என்ற சொல்லின் இலக்கண குறிப்பு யாது?

A] வினைத்தொகை

B] அன்மொழித்தொகை

C] உருவகத்தொடர்

D] உருபு மயக்கம்

11) நடலை - என்பதன் பொருள் யாது?

A] நரகம்

B] இறப்பு

C] சூளை நோய்

D] துன்பம்

12) இடர்ப்படோம் - என்ற சொல்லின் இலக்கண குறிப்பு யாது?

A] ஏழாம் வேற்றுமைத் தொகை

B] ஐந்தாம் வேற்றுமைத் தொகை

C] ஏழாம் வேற்றுமை விரி

D] இரட்டுறமொழிதல்

விடைகள் - சிவபெருமான்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | B | 2 | A | 3 | C | 4 | D | 5 | B |
| 6 | C | 7 | A | 8 | C | 9 | D | 10 | A |
| 11 | B | 12 | C | | | | | | |

## (ஆ) திருமால்

1) 'ஆழிமழைக் கண்ணா ஒன்று நீ கைகரவேல்' - என்ற பாடலை பாடியவர் யார்?

A] நம்மாழ்வார்

B] குலசேகர ஆழ்வார்

C] ஆண்டாள்

D] திருமங்கையாழ்வார்

2) 'ஆழிமழைக் கண்ணா ஒன்று நீ கைகரவேல் - எனத் தொடங்கும் பாடலானது கீழ்க்கண்ட எந்த நூலில் இடம்பெற்றுள்ளது?

A] பெருமாள் திருமொழி

B] திருப்பாவை

C] சிறிய திருமடல்

D] நாச்சியார் திருமொழி

3) 'ஆழிமழைக் கண்ணா ஒன்று நீ கைகரவேல் - எனத் தொடங்கும் பாடலானது திருப்பாவை என்னும் நூலில் எத்தனையாவது பாடலாக இடம்பெற்றுள்ளது?

A] முதல் பாடல்

B] இரண்டாம் பாடல்

C] நான்காம் பாடல்

D] ஐந்தாம் பாடல்

4) பக்திக் காலத்தில் எழுதப் பெற்ற உயரிய பக்தி இலக்கியம் எது?

A] பெரிய திருவந்தாதி

B] திருவாசிரியம்

C] திருவிருத்தம்

D] திருப்பாவை

5) கீழ்க்கண்ட எந்த நூலானது ஆழ்வார்களால் வேதம் அனைத்திற்கும் வித்து என்று புகழப்படுகிறது?

A] திருப்பாவை

B] நாச்சியார் திருமொழி

C] திருகுறுந்தாண்டகம்

D] கண்ணின்நுண்சிறுத்தாம்பு

6) நாலாயிரத் திவ்விய பிரபந்த தொகுப்பில் திருப்பாவை நூலானது எத்தனையாவது பிரபந்தமாக வைக்கப்பட்டிருக்கிறது?

A] இரண்டாவது பிரபந்தம்

B] மூன்றாவது பிரபந்தம்

C] முதலாவது பிரபந்தம்

D] நான்கவது பிரபந்தம்

7) பாவை - என்பது கீழ்க்கண்ட வகைகளில் ஒன்றாக கூறப்படுகிறது?

A] காப்பியங்கள்

B] பேரிலியக்கங்கள்

C] சிற்றிலக்கியங்கள்

D] பக்தி இலக்கியங்கள்

8) பாவை - என்ற சொல்லானது கீழ்க்கண்ட எந்த படிமத்தைக் குறிக்கிறது?

A] பெண்மை

B] அழகு

C] கற்பனை

D] பொம்மை

9) பாவை - என்ற சொல்லின் சிறப்பு யாது?

A] கருவியாகு பெயர்

B] இருமடியாகுபெயர்

C] அடையடுத்த கருவியாகுபெயர்

D] சொல்லாகுபெயர்

10) திருப்பாவை நூல்களில் மொத்தம் எத்தனை பாடல்கள் இடம்பெற்றுள்ளன?

A] 30 பாடல்கள்

B] 100 பாடல்கள்

C] 150 பாடல்கள்

D] 70 பாடல்கள்

11) திருப்பாவை அருளிய ஆண்டாள் கீழ்க்கண்டவற்றில் யாருடைய வளர்ப்பு மகள் ஆவார்?

A] திருமங்கையாழ்வார்

B] நம்மாழ்வார்

C] பெரியாழ்வார்

D] குலசேகரயாழ்வார்

12) கீழ்க்கண்ட யாரை மழைக்கு அதிபதியாக ஆண்டாள் கூறுகிறார்?

A] இந்திரன்

B] வருணன்

C] பிரம்மன்

D] பர்ஜன்யன்

13) ஊழி முதல்வன் உருவம் போல் மெய்கறுத்துப் - என்ற வரியில் இடம்பெற்றுள்ள ஊழி முதல்வன் என்ற சொல்லானது கீழ்க்கண்ட யாரைக் குறிக்கிறது?

A] கண்ணபிரான்

B] இராமபிரான்

C] நரசிம்மர்

D] பெரியாழ்வார்

14) சார்ங்கம் - என்ற சொல்லின் பொருள் யாது?

A] சக்கரம்

B] வில்

C] கடல்

D] மழை

15) ஆழிபோல் மின்னி, வலம்புரிபோல் நின்றதிரிந்து - என்ற வரியில் இடம்பெற்றுள்ள ஆழி என்ற சொல்லின் பொருள் யாது?

A] கடல்

B] வில்

C] சக்கரம்

D] மழை

விடைகள் - திருமால்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | C | 4 | D | 7 | C | 10 | A | 13 | A |
| 2 | B | 5 | A | 8 | D | 11 | C | 14 | B |
| 3 | C | 6 | B | 9 | B | 12 | D | 15 | C |

## (இ) இயேசு பிரான்

1) மூவாத முதலவனை முதுசுருதி மொழிப்பொருளை - என்ற வரித் தொடங்கும் பாடலை பாடியவர் யார்?

A] வீரமாமுனிவர்

B] எச்.ஏ.கிருஷ்ணபிள்ளை

C] வேதநாயக சாஸ்திரியார்

D] ஜி.யூ.போப்

2) எச்.ஏ.கிருஷ்ணப்பிள்ளை அவர்கள் கீழ்க்கண்ட எந்த ஊரில் பிறந்தார்?

A] பென்னாகரம்

B] பொள்ளாச்சி

C] கரையிருப்பு

D] சங்கரன்கோவில்

3) எச்.ஏ.கிருஷ்ணப்பிள்ளை அவர்கள் பிறந்த ஆண்டு யாது?

A] 1827

B] 1825

C] 1823

D] 1824

4) எச்.ஏ.கிருஷ்ணப்பிள்ளை அவர்கள் இயற்றிய நூல்களில் தவறானது எது?

A] போற்றித் திருவகவல்

B] இரட்சணிய போதனைகள்

C] இரட்சணிய மனோகரம்

D] இரட்சணிய யாத்திரிகம்

5) எச்.ஏ.கிருஷ்ணப்பிள்ளை எழுதிய எந்த இரு நூல்கள் தற்போது கிடைக்கவில்லை?

A] போற்றித் திருவகவல், இரட்சணிய மனோகரம்

B] இரட்சணிய யாத்திரிகம், இரட்சணியக் குறள்

C] இரட்சணியக் குறள், இரட்சணிய பால போதனைகள்

D] இரட்சணிய பால போதனைகள், போற்றித் திருவகவல்

6) மூவாத முதலவனை முதுசுருதி மொழிப்பொருளை - எனத் தொடங்கும் பாடலானது கீழ்க்கண்ட எந்த நூலில் இடம்பெற்றுள்ளது?

A] இரட்சணிய யாத்திரிகம்

B] இரட்சணிய குறள்

C] போற்றித் திருவகவல்

D] இரட்சணிய மனோகரம்

7) இரட்சணிய மனோகரம் நூலில் உள்ள பாடல்களானது கீழ்க்கண்ட எந்த பாவகையால் ஆனது?

A] வெண்பாவிருத்தம்

B] கலிவிருத்தம்

C] ஆசிரியவிருத்தம்

D] வஞ்சிவிருத்தம்

8) எச்.ஏ.கிருஷ்ணப்பிள்ளை அவர்களின் கீழ்க்கண்ட எந்த நூலானது கல் மனத்தையும் கரையச் செய்யும் பக்திப் பாடல்களின் தொகுப்பாகும்?

A] இரட்சணிய மனோகரம்

B] இரட்சணிய பால போதனைகள்

C] இரட்சணிய யாத்திரிகம்

D] இரட்சணியக் குறள்

9) இரட்சணிய மனோகரம் நூலின் பெரும்பகுதியானது கீழ்க்கண்ட எந்த நூலிருந்து எடுத்துத் தொகுக்கப்பட்டது?

A] இரட்சணியக் குறள்

B] இரட்சணிய யாத்திரிகம்

C] போற்றித் திருவகவல்

D] இரட்சணிய பால போதனைகள்

10) விடாப்பிடியாக ஒரு செயலை முன்னின்று நடத்திக்காட்டுதலுக்கு வழங்கப்படும் வட்டார வழக்கின் பெயர் யாது?

A] தசங்கட்டுதல்

B] தநுவெடுத்தல்

C] துசங்கட்டுதல்

D] தலிவெடுத்தல்

விடைகள் - இயேசு பிரான்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | B | 2 | C | 3 | A | 4 | B | 5 | C |
| 6 | D | 7 | B | 8 | A | 9 | B | 10 | C |

## (ஈ) புத்தர்

1) அருள்வீற் றிருந்த திருநிழல் போதி - என்ற வரியானது கீழ்க்கண்ட எந்த நூலில் இடம்பெற்றுள்ளது?

A] வீரசோழியம்

B] பெருங்கதை

C] நாலடியார்

D] குண்டலகேசி

2) ஐந்திலக்கணம் கூறும் இலக்கண நூல் எது?

A] மாறனலங்காரம்

B] வீரசோழியம்

C] தண்டியலங்காரம்

D] மகாபாரதம்

3) வீரசோழியம் என்ற நூலை எழுதியவர் யார்?

A] நக்கீரர்

B] பெருங்கடுங்கோன்

C] புத்தமித்திரர்

D] நல்லுருத்திரான்

4) வீரசோழியம் - என்ற நூலுக்கு உரை எழுதியவர் யார்?

A] உச்சிமேற்புலவர் நச்சினார்க்கினியார்

B] சிற்பி பாலசுப்ரமணியம்

C] அடியார்க்கு நல்லார்

D] பாரதம் பாடிய பெருந்தேவனார்

5) ஓங்குநீர் - என்ற சொல்லின் பொருள் யாது?

A] ஊற்றுநீர்

B] கடல்

C] நதி

D] கேணி

6) நிழல் போதி - என்ற சொல்லின் இலக்கண குறிப்பு யாது?

A] இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கதொகை

B] தன்மை பன்மை வினைமுற்று

C] வினைத்தொகை

D] உருவகத்தொடர்

7) வினைப்பிணி - என்ற சொல்லின் இலக்கண குறிப்பு யாது?

A] வினைத்தொகை

B] பண்புத்தொகை

C] உருவகத்தொடர்

D] உவமைத்தொகை

8) பொருத்துக

1) முதல் மூன்று தேவாரம் - ஆண்டாள்;

2) 4, 5, 6 ஆம் திருமுறைகள் - சுந்தரர்;

3) ஏழாம் திருமுறை - திருஞானசம்பந்தர்;

4) திருப்பாவை - திருநாவுக்கரசர்;

A] 2 3 1 4

B] 4 2 3 1

C] 1 2 3 4

D] 3 4 2 1

9) பொருத்துக

1) கிறித்துவக் கம்பன் - அப்பர்;

2) மருள் நீக்கியார் - ஆண்டாள்;

3) பெரியாழ்வார் வளர்ப்பு மகள் - புத்தமித்திரர்;

4) வீரசோழியம் பாடியவர் - கிருஷ்ண பிள்ளை;

A] 4 1 2 3

B] 1 2 3 4

C] 3 4 1 2

D] 2 3 4 1

10) முப்பகை என கூறிய பொருள்களில் கீழ்க்கண்டவற்றில் தவறானது எது?

A] காமம்

B] இன்பம்

C] வெகுளி

D] மயக்கம்

விடைகள் - புத்தர்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | A | 3 | C | 5 | B | 7 | C | 9 | A |
| 2 | B | 4 | D | 6 | A | 8 | D | 10 | B |

நன்றி - கோ.பழனிமுருகன்